# படிப்பு உதவிகள்

# ஆபிரகாம்

# விசுவாசத்திற்கு சோதனைகள்

## எடி குளோர்

*வேதபாடப் பகுதி: ஆதியாகமம் 17:27-22:19*

*"தேவன் கூறியுள்ளவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றின்படி நம்பிக்கையுடனும் அன்புடனும் செயல்படுதல்" என்பது வேதாகமரீதியான விசுவாசத்திற்கு ஒரு நல்ல, எளிய விளக்கமாகும். இந்த விளக்கம், எபிரெயர் 11:1 மற்றும் ரோமர் 10:17 ஆகிய இரண்டு வேதவசனங்களில் செறிவடைந்துள்ளது.*

*எபிரெயர் 11:1ம் வசனம், விசுவாசத்தின் விவரிப்பு ஒன்றை நமக்குத் தருகிறது: "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." இவ்வசனமானது, விசுவாசம் என்பது தேவன் நம்மை இரட்சிக்கும்படி, நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்கும்படி, மற்றும் நமக்கு அவர் அளித்துள்ள பிற வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் காத்துக்கொள்ளும்படி, நாம் எதிர்பார்த்தலுக்குக் காரணமாக, நமது அடிப்படையாக உள்ளது. தேவன் இருக்கின்றார் மற்றும் அவரது நேர்மைத் தன்மை ஆகியவற்றின்மீதான வலுவான நம்பிக்கைக்கு ஆதாரமாக உள்ள விஷயத்தையே நாம் விசுவாசம் என்று அழைக்கின்றோம்.*

*ரோமர் 10:17 வசனம், விசுவாசம் தோன்றுமிடம் பற்றி நமக்கு அறிவுறுத்துகிறது: "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." இவ்வசனம், வேதவசனங்களினால் விசுவாசம் உண்டாக்கப்படுகிறது என்று உறுதிப்படுத்துகிறது. தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுதல் விசுவாசத்தைக் கொண்டுவருகிறது. ஆகையால், தேவன் கூறியுள்ளவற்றை ஏற்றுக்கொள்வதினால் மாத்திரமே நாம் உண்மையான விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியும்.*

*முன்னோடிப் பிரசங்கியார்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு பழைய விவரிப்பு, விசுவாசம், அபிப்பிராயம், மற்றும் அறிவு ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாட்டைக் காண்பதற்கு நமக்கு உதவுகிறது. ஒரு வேளை நான் ஒரு சபைக்குழுமத்தின் முன்பாக நின்று, மூடப்பட்ட கையை அவர்களுக்கு முன்பாக உயர்த்தி, "என் கைக்குள் என்ன இருக்கிறது என்று உங்களால் யூகிக்க முடியுமா?" என்று கேட்பதாக வைத்துக்கொள்வோம். அங்கிருப்பவர்களில் ஒருவர், நான் எனது கைக்குள் ஒரு சாவியை வைத்திருப்பதாகக் கூறலாம். இன்னொருவர், நான் ஒரு நாணயத்தைப் பிடித்திருப்பதாகக் கருத்துத் தெரிவிக்கலாம். இன்னும் வேறொருவர்,*

நான் எனது கைக்குள் ஒரு பொத்தானை வைத்திருப்பதாக நினைக்கலாம். இந்த பதில்கள் யாவும் நல்ல யூகங்களாக இருக்க முடியும் - ஆனால் இவைகள் யூகங்களாக மாத்திரமே இருக்கின்றன. நான் எனது கையில் என்ன வைத்திருக்கின்றேன் என்பது பற்றிய ஆதாரம் எதையும் அவர்கள் கொண்டிராதபடியால், அவர்கள் கூறும் கருத்துக்கள் யாவும் அபிப்பிரா யங்கள் என்பதைத் தவிர வேறொன்றும் அதிகமாய் இருப்பதில்லை.

ஒருவேளை நான் அதன் பின்பு எனது கையில் இருப்பது ஒரு சிறிய கூழாங்கல் என்று அவர்களிடம் கூறுவதாக வைத்துக்கொள்வோம். நான் எதை வைத்திருப்பதாகக் கூறுகின்றேனோ அந்தக் கூற்றை அவர்கள் கேட்டு, அதை ஏற்றுக்கொண்டு அதை நம்பினால், நான் கூறியதை அவர்கள் ஏற்றுக்கொண்ட விஷயமானது அவர்களை அபிப்பிராயத்தில் இருந்து விசுவாசத்திற்கு நகர்த்துவதாக இருக்கும். எனது சாட்சியம் அவர்களுக்குள் விசுவாசத்தை உண்டாக்குவதற்கான ஆதாரமாக இருக்கும்.

ஒருவேளை நான் அதன்பின்பு எனது கையில் உள்ள சிறு கல்லை அவர்களுக்குக் காண்பிக்கின்றேன் என்று வைத்துக்கொள்வோம். அதை அவர்கள் பார்த்த உடனே, அதைப் பற்றி நான் அவர்களுக்கு உண்மை யையே கூறியிருந்தேன் என்று அவர்கள் அறிவார்கள். அந்தச் சிறு பொருளைப் பார்த்த செயல் அவர்களின் விசுவாசத்தை அறிவாகத் திருப்பும்/மாற்றும்.

எனது கையில் என்ன இருக்கிறது என்று அவர்கள் யூகித்தபோது, அவர்கள் தங்களின் அபிப்பிராயங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். எனது கையில் நான் ஒரு சிறு கல்லை வைத்திருந்தேன் என்று கூறிய கூற்றை அவர்கள் ஏற்றுக்கொண்டபோது, அவர்கள் விசுவாசத்திற்கு வந்தனர். எனது கையில் நான் வைத்திருந்ததை அவர்கள் கண்டபோது, அவர்கள் அறிவிற்குள் கடந்து சென்றனர். விசுவாசம் என்பது அபிப்பிராயமல்ல, ஏனெனில் அது சாட்சியத்தின்மீது அமைந்துள்ளது. விசுவாசம் என்பது அறிவல்ல, ஏனெனில் அது காணப்படாதவற்றைப் பற்றிய சாட்சியத்தை ஏற்றுக்கொள்வதாக உள்ளது.

வேதாகமம் விசுவாசத்திற்கு விளக்கம் தருவதோடு, அதைப் பற்றி செயல்விளக்கப்படுத்தவும் செய்கிறது. ஆபிரகாம், வேதாகமத்தில் உண்மையான விசுவாசத்திற்குத் தேவனுடைய தலைசிறந்த உதாரண மாக இருக்கும்படி தேவனே தேர்ந்தெடுத்த மனிதராவார். அவரது விசுவாசத்தின் காரணமாக, அவர் "தேவனுடைய சிநேகிதர்" என்று அழைக்கப்படுகின்றார் (ஏசாயா 41:8; யாக்கோபு 2:23). அவரது விசுவாசநிறைவின் காரணமாக, அவர் விசுவாசிகளுக்குத் தகப்பன் என்று கூறப்படுகின்றார். அதாவது, விசுவாசிக்கின்ற யாவரும், ஒரு கருத்தமைவில் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருக்கின்றோம் (ரோமர் 4:16; கலாத்தியர் 3:7). ஆபிரகாமின் மூலமாகத் தேவன் நமக்கு, விசுவாசம் கொண்டிருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது என்று காண்பித்திருக்கின்றார்.

நாம் விசுவாசத்தில் நடக்க அல்லது வாழ வேண்டும் (2 கொரிந்தியர் 5:7) என்பதால், நாம் ஆபிரகாமின் வாழ்வைக் கண்ணோக்கி, விசுவாசமுள்ள நபராக இருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது என்று காண்

போமாக. ஆபிரகாம் மூன்று மாபெரும் சோதனைகளை எதிர்கொண்டார், மற்றும் இந்த சோதனைகள் விசுவாசத்தின் பகுதிப்பொருட்களை விவரிக்கின்றன.

## புறப்பட்டுச் செல்லும்படியான சோதனை

ஆபிரகாம் - அல்லது முதலில் அவர் பெயர் அறியப்பட்டபடி, ஆபிராம் - புறப்பட்டுச் செல்லுதல் என்பது அவருக்கான முதல் சோதனையாக இருந்தது. அவர் தமது இல்லங்கள் இருந்த கல்தேயாவின் ஊர் என்ற பட்டணத்தில் இருந்தும், ஆரான்[1] என்ற இடத்தில் இருந்தும் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டார் (ஆதியாகமம் 11:27-31). தேவன் அவருக்கு இன்னொரு இடத்திற்கு வழிகாட்டுவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். ஊர் என்ற இடத்தில் ஏற்பட்ட முதல் அழைப்பு, கி.மு. 2165ல்[2] ஏற்பட்டிருக்கலாம் என்று தேதியிடப்படுகிறது. இரண்டாவது அழைப்பு, ஒருவேளை பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்பு, ஆரானில் ஏற்பட்டிருக்கலாம்.

அவர் முதன்முதலாக அழைக்கப்பட்ட ஊர் என்ற பட்டணம், மெசப்பொத்தாமியாவில் இருந்தது, அது கலாச்சாரம், கற்றுக்கொள்ளுதல் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் தலைசிறந்த பட்டணமாக இருந்தது. ஊர் என்ற பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லுதல் என்று ஆபிரகாம் மேற்கொண்ட முடிவு கடினமானதாக இருந்திருக்கும்.

புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், ஊர் என்ற இடத்தில் மேற்கொண்ட தங்கள் அகழ்ஆய்வுகளின்மூலம், அந்த நகரமானது சுமார் நான்கு சதுர மைல்கள் அளவுக்கு இருந்தது என்றும் அது சுமார் 300,000 மக்கள் தொகையைக் கொண்டிருந்தது என்றும் கருத்தை நிலைநாட்டியுள்ளனர். ஊர் என்பது தலைச்சிறந்த மற்றும் வசதிவாய்ப்பு மிகுந்த, அறிவாற்றல் நிறைந்த நகரமாய் இருந்தது. ஊர் என்ற நகரத்தில் வாழ்ந்திருந்த மக்களில் பலர் மிக உயர்ந்த கல்வியறிவு கொண்டிருந்தனர் என்று வரலாறும் புதைபொருள் ஆராய்ச்சியும் ஒருசேர உறுதிப்படுத்தியிருக்கின்றன. அவர்கள் கணிதம், வானவியல், நெசவு, மற்றும் கல்வெட்டு செதுக்குதல் போன்றவற்றில் திறமைசாலிகளாய் இருந்தனர். அத்துடன் கூடுதலாக, அவர்கள் ஒருவகையான எழுத்து வடிவத்தைப் பயன்படுத்தி, தங்களுக்குப் பின் களிமண் பலகைகளில் தங்களின் எழுத்துக்களை விட்டுச் சென்றுள்ளனர், அவைகள், இந்த நகரத்தின் சமூக மற்றும் மதரீதியான வாழ்வு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை மறுகட்டமைப்புச் செய்யும் பணியில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு மதிப்புமிக்கவைகளாக உள்ளன. மதரீதியாக அந்த நகரத்தவர், பலதெய்வ வணக்கம் செய்பவர்களாய் இருந்தனர், அவர்கள் பல தெய்வங்களை, குறிப்பாக இயற்கைத் தெய்வங்களை வணங்கி வந்தனர். ஊர் என்ற இந்த நகரத்தின் மையப்பகுதியில் ஒரு பெரிய ஆராதனை மையம் அல்லது கோவில் இருந்தது, அது ஜீகுராத் என்று அழைக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் மக்கள் தங்களின் முக்கிய தெய்வமான நன்னா[3] என்ற சந்திரக் கடவுளை ஆராதித்தனர்.

யோசுவா 24:2ம் வசனம், ஆபிராமின் தந்தையான தேராகு என்பவர் விக்கிரகங்களை ஆராதித்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது:

> அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி: "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: 'பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு[4] அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள்.' "

ஆபிராம் எப்போது யெகோவா தேவனை அறிந்தார் என்று நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் ஏதோ ஒரு வேளையில் அவர் யெகோவா தேவன்மீது பலத்த மற்றும் ஆழ்ந்த விசுவாசம் கொண்டவர் ஆனார்.

ஆபிராம் தேவனால் அழைக்கப்பட்டபோது, தேராகும் ஆபிராமும் ஊர் என்ற நகரத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் வடக்கு நோக்கி அறுநூறு மைல்கள் பயணம் செய்து ஆரானில் குடியமர்ந்தனர். ஆதியாகமம் 11:31ம் வசனம், தேராகு ஆபிராமைக் கூட்டிச் சென்றார் என்று கூறுகிறது. இது ஊர் என்ற நகரத்தில் ஆபிராம் தமது முதல் அழைப்பைப் பெற்ற பின்பு நடந்திருக்க வேண்டும், அவர் தேராகுவை ஊர் என்ற நகரத்தை விட்டுப் புறப்படும்படி இணங்கச் செய்திருந்தார்; பின்பு குலத்தின் முற்பிதாவாக இருந்த தேராகு அவர்களை ஆரானுக்கு வழிநடத்திச் சென்றார். ஆபிராம், தமது தந்தையின் வயது மற்றும் உடல் ஆரோக்கிய [குறைவு] ஆகியவற்றினிமித்தம் ஆரானில் நிற்கச் சம்மதித்திருக்கலாம். அவர் தேராகுவின் மரணம் வரையிலும், அதாவது அவர் தமது 205ம் வயதில் இறக்கும் வரையிலும் ஆரானில் வாழ்ந்தார் (ஆதியாகமம் 11:32-12:3).

ஒருவேளை, ஆபிராமுக்குக் கிடைத்திருந்த முதல் அழைப்பிற்குப் பதினைந்து ஆண்டுகள் பிற்பாடு, தேவன் ஆரானில் ஆபிராமைத் திரும்பவும் அழைத்தார் (ஆதியாகமம் 12:1-3). தேவன் இந்த அழைப்புடன், பழைய ஏற்பாட்டின் இருதயம் போன்ற மையப்பகுதியாகக் கருதப்படும் வாக்குத்தத்தம் ஒன்றை ஆபிராமுக்கு ஏற்படுத்தினார்.[5]

> கர்த்தர் ஆபிராமை நோக்கி: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதியா கமம் 12:1-3).

ஆபிராமுக்கு, அவரது தேசத்தையும், இனத்தையும், தந்தையின் வீட்டையும் விட்டு முன்செல்லும்படி தேவன் அறிவுறுத்தினார். வரிசை முறையைக் கவனியுங்கள்; இவை ஒவ்வொன்றும் வளர்நிலையில் மாபெரும் தியா கத்தைப் பிரதிபலிக்கின்றன.

*ஆபிராம் இந்தச் சோதனையில் தேர்ச்சிபெற்றாரா? வசனப்பகுதி, “கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான் ...” (ஆதியாகமம் 12:4) என்று கூறுகிறது. அவர் தமக்குத் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளாய் இருந்த - நாடு, உறவினர்கள், மற்றும் நெருங்கிய சொந்தங்கள் என்ற - ஒவ்வொன்றையும் கைவிட்டுச் சென்றார். ஆபிராம் தமக்கு எழுபத்தி ஐந்து வயதாக இருந்தபோது தேவனுடைய இக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார் (ஆதியாகமம் 12:4). எபிரெயர் 11:8ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்,*

> *விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்.*

*ஆபிராம் தமது உடைமைகளை கட்டி எடுத்துக்கொண்டு, தனது வேர்களைப் பிடுங்கி எடுத்து, தமது சொந்த நாட்டில் இருந்து புறப்பட்டு, தமக்குக் கர்த்தர் காண்பித்த இடத்திற்குச் சென்ற இவ்வழியில், நமக்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றார். அவரைப் புறப்பட்டுச் செல்லும்படி தேவன் கேட்டுக்கொண்டபோது, அவர் புறப்பட்டுச் சென்றார். அதுவே விசுவாசமாக உள்ளது. அப்படிப்பட்ட ஒரு பதில்செயலானது எவரொருவரும் செய்யக் கடினமானதாகவே இருக்கும். தேவன் தமது அழைப்பிற்கு, ஆபிராம் கீழ்ப்படிந்த செயலை, விசுவாசத்தின் வெளிப்பாடாகக் கண்டார்.*

*எனவே இங்கு, விசுவாசத்தினால் நடப்பதன் முதல் பாகம் உள்ளது: “புறப்பட்டுச் செல்லுதல்.” தேவன் ஆபிராமிடம் கேட்டுக்கொண்டது போல், நம்மிடத்தில் நமது சொந்த நாடுகளை விட்டுப் புறப்பட்டு மற்ற இடங்களுக்குச் செல்லும்படி கேட்டுக்கொண்டிருப்பதில்லை. இருப்பினும், அவரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரையும் பாவத்தின் நாட்டை விட்டுப் புறப்பட்டு, நீதிக்கென்று வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்கு விசுவாசத்தில் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இந்த “புறப்படுதல்” கொலோசெயில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதிய நிருபத்தில் எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பதைக் கவனியுங்கள்:*

> *ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர்*

*பொய்சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கை களையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவையடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே (கொலோசெயர் 3:5-10).*

*ஜெஃப்ரி தாமெர் என்ற தொடர் கொலைகார நபர் மனந்திரும்புவதில் உதவிய கர்ட்டிஸ் பூத் என்ற சகோதரர் என்னிடத்தில், ஆக்லஹாமா நகரத்தில் உள்ள அரசுக் கட்டிடத்திற்கு வெடிகுண்டு வைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட தீமோத்தி மெக்வெய் என்பவருடன் தாம் சமீபத்தில் [வேதாகமத்தை] படித்ததாகக் கூறினார். தீமோத்தி விசாரணைக்காக டென்வருக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பு பதினைந்து பாடங் களை முடித்திருந்ததாக அவர் கூறினார். சகோதரர் பூத்துடன் நான் பேசிய வேளையில், டென்வரில் தீமோத்திக்கு இறுக்கமான பாதுகாப்பு அவசிய மாய் இருந்ததால், அவர் தமது படிப்புகளைத் தொடர அனுமதிக்கப் படுவாரா என்று பூத் அறிந்திருக்கவில்லை. அவரது வழக்கறிஞர் தீமோத் திக்கு வேதாகம அஞ்சல்வழிப் பாடங்களைத் தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவும், தீமோத்தி அந்தப் பாடங்களை முடித்துத் தம்மிடம் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதற்காகவும் தாம் ஜெபிப்பதாக அவர் கூறினார். சகோதரர் பூத் அவர்களின் வேண்டுதலினுடைய விளைவு என்ன என்று நான் கேள்விப்படவில்லை.*

*சுவிசேஷம் எல்லாருக்குமானதாக - நாம் மிகமோசமானவர்கள், இடை நிலைப்பட்டவர்கள், மற்றும் மிகச்சிறந்தவர்கள் என்று கருதும் யாவருக்கு மானதாக - உள்ளது. யூதர்களும் புறஜாதிகளுமாகிய இரு சாராருமே விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகின்றனர். அவ்விருவருக்கும் இடையில் தேவன் வித்தியாசம் எதையும் ஏற்படுத்துவதில்லை (நடபடிகள் 15:9). எல்லாருக்கும், இரட்சிப்புக்கேற்ற விசுவாசமானது மனந்திரும்புதலை, பாவ மான வாழ்வை "விட்டுப்புறப்படுதலை," மற்றும் நீதிக்குள் தேவனைப் பின்பற்றுவதை உள்ளடக்குகிறது (நடபடிகள் 17:30, 31). தேவன் நம்மில் எவரையும் ஏற்றுக்கொள்வார், ஆனால் நாம் அவரிடத்தில் விசுவாசத்துடன், நாம் பாவத்தை விட்டுவிடவும் அவரில் நம்பிக்கை வைக்கவும் காரணமாகும் விசுவாசத்துடன் அவரிடத்திற்கு வரவேண்டும்.*

## நம்பிக்கை வைத்தலுக்கான சோதனை

*ஆபிராம் கானான் நாட்டில் வந்து சேர்ந்தபோது, அவர் தமது இரண் டாவது சோதனையாகிய, நம்பிக்கை வைத்தலுக்கான சோதனையை எதிர்கொண்டார். தேவன் ஆபிராமை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். ஆபிராம் தமது எதிர்காலம் பற்றிக் குழப்பம் அடைந்த நிலையில் தேவனிடத்தில் "கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே, ... ?" என்று கேட்டார் (ஆதியாகமம் 15:2). தேவன், ஆபிராமுக்கான தமது திட்டத்தில் சந்ததி யார்களும் பாகமாய் இருந்தனர் என்று கூறினார்; அவர் ஆபிராமுக்கும்*

சாராயிக்கும் ஒரு மகனைத் தருவார்.

> அவர் அவனை வெளியே அழைத்து: "நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு" என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: "உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்." அவன் கர்த்தரை விசுவாசித் தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (ஆதியாகமம் 15:5, 6).

தேவன் ஆபிராமுக்குப் பலஸ்தீனத்தை உடைமையாகக் கொடுப்பதாகவும் கூறினார் (ஆதியாகமம் 15:7). உறுதிப்பாட்டை விரும்பிய ஆபிராம் அவரிடத்தில், "... நான் அதை சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன்?" என்று கேட்டார். அவரது கேள்விக்குப் பதிலுரையாகத், தேவன் ஆபிராமுடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்வதில் ஈடுபட்டார்.

பழைய ஏற்பாடு உண்மையில், மனிதருடனான தேவனுடைய உடன் படிக்கைகளின் வரலாறாக உள்ளது. தேவன் தமது உடன்படிக்கையை ஆபிராமுக்கு வெளிப்படுத்த ஒரு ஒப்பந்தச் சடங்காச்சாரத்தைப் பயன்படுத்தினார். அவர் ஆபிராமிடம், மூன்று வயதுக் கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும், மூன்று வயது ஆட்டுக்கடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும் கொண்டுவரும்படி கூறினார். அவர் அந்த கிடாரியையும், வெள்ளாட்டையும், ஆட்டுக்கடாவையும் நடுவாகத் துண்டிக்க வேண்டியதாய் இருந்தது. ஆபிராம் தமக்குக் கூறப்பட்டபடியே செய்தார். அவர் கிடாரியையும், வெள்ளாட்டையும், ஆட்டுக்கடாவையும், நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக் கொன்று எதிராக வைத்து அந்தப் பாதித்துண்டங்களுக்கு இடையில் ஒரு பாதையை விட்டுவைத்தார். அந்த இரவில், புகைகிற சூளையும் அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிஜுவாலையும் தோன்றின (ஆதியாகமம் 15:7-17).

உடன்படிக்கை ஏற்படுத்துவதற்கான இந்த முறைமையானது, "ஒரு உடன்படிக்கையை வெட்டுதல்" என்ற சொல்விளக்கத்தைத் தோன்றச் செய்திருக்கலாம். "நீ இந்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்காதிருந்தால், இந்த மிருகங்களைப் போன்றே நீயும் மேலிருந்து கீழாக வெட்டப்படுவாய்" என்பது இதன் கீழ் உள்ள கருத்தாகக் காணப்படுகிறது. மாதிரி என்ற வகையில் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளும் இரு குழுவினரும், மிருகங் களின் துண்டிக்கப்பட்ட பாகங்களுக்கு மத்தியில் நடப்பார்கள், ஆனால் இந்த விஷயத்தில், தேவனே உடன்படிக்கையை ஏற்படுத்தியவராக இருந்தார். இது ஒரு சாராரின் உடன்படிக்கையாக இருந்தது, எனவே அவர் மாத்திரம் தனியாக அப்பாதையில் நடந்தார்.

தேவன், ஆபிராமின் பயனுக்காக இந்த வழியில் முற்றிலும் நடந்து சென்றார். தேவன் நித்தியமான தேவனாக இருக்கின்றார். அவரது பண்புகள் யாவும் பூரணப்பட்டவைகளாக உள்ளன. அவரது வார்த்தை/ வசனம் சத்தியமானது அதில் ஒரு பகுதியாவது தன்னில் தவறாக

இருப்பதில்லை. அவர் எதையும் எவரொருவருக்கும் உறுதிப்படுத்தத் தேவையில்லை. அவரிடத்தில் இருந்து வருகிற எந்த வாக்குத்தத்தமும், பூமியின் அஸ்திபாரம் போன்று நிச்சயமானதாக உள்ளது, ஆனால் ஆபிராம் தமது விசுவாசத்திற்காகத் தேவனிடத்தில் இருந்து சாட்சியம் பெற்றுக்கொள்ளும்படிக்குத் தேவன் இந்தச் சடங்காச்சாரத்தைச் செய்வித்தார்.

அடுத்த ஒருசில ஆண்டுகளுக்கு, தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மீது நம்பிக்கை கொண்டிருத்தல் என்பதே ஆபிராமின் பணிப்பொறுப்பாக இருந்தது. ஆபிராமும் சாராயும், தங்களுக்குத் தேவன் உடனடியாகத் தங்களின் மகனைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தனர் என்பது உறுதி. ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவர்கள் இருவருக்குமே நித்தியம் போன்று காணப்பட்டிருக்க வேண்டிய பத்து ஆண்டுகள் காத்திருந்தபின்பு (ஆதியாகமம் 16:3), அவர்கள் அதைக்குறித்து ஏதேனும் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தனர், அவர்கள் விஷயங்களைத் தங்கள் சொந்தக் கரங்களில் எடுத்துக்கொண்டனர். இவ்விடத்தில் ஆபிராமின் விசுவாசத்தில் ஒரு இடைமுறிவு இருந்தது.

சாராய், தங்களுக்குப் பிள்ளை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, ஆபிராம் ஆகாரை இரண்டாம் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தாள் (ஆதியாகமம் 16:1-4). சாராயின் கருத்தை ஆபிராம் ஏற்றுக்கொண்டார். சாராயிக்குப் பிள்ளை எதுவும் பிறக்காதபடியால், ஆகாரின் மூலமாக வாரிசு ஒன்றைத் தருதல் என்பது தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்ததை நிறைவேற்றுவதாக இருக்கும் என்று ஆபிராம் தமக்குள் நிதானித்துக்கொண்டார். ஆபிராம் இவ்வாறு செய்தது தவறாயிருந்தது, ஏனெனில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பிள்ளையானது தேவனுக்கு ஏற்புடைய காலத்தில் சாராய் மூலமாகவே பிறக்க வேண்டியதாயிருந்தது. ஆபிராமும் சாராயும் மிகவும் பொறுமையற்றவர்களாகி இருந்தனர்.

ஆபிராமின் நடவடிக்கைகள், தவறாகவும் விசுவாசக்குறைவை வெளிப்படுத்துபவைகளாகவும் இருந்தபோதிலும், அவைகள், அந்த நாட்களின் கலாச்சாரங்களுடைய பின்னணியில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆபிராமும் சாராயும் தங்கள் பிரச்சனைக்கு மேற்கொண்ட அணுகுமுறை, நவீன வாசகருக்கு விநோதமானதாகத் தோன்றினாலும், அது அவர்களின் நாட்களில் மற்றும் அவர்களின் கலாச்சாரத்தில், பிள்ளையின்மையைக் கையாள்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறையாக இருந்திருக்கலாம். மலடியாக உள்ள மனைவியொருத்தி, ஒரு அடிமைப் பெண்ணைத் தனது கணவருக்குக் கொடுத்து, அந்த உறவின்மூலம் பிறக்கும் பிள்ளையின்மீது சட்டப்பூர்வமாக உரிமையைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்று ஹம்முரபி[6] அரசரின் சட்டக்கோட்பாடும் நூஸி பதிவேடு[7]களும் சுட்டிக்காண்பிக்கின்றன. பிள்ளை பிறந்தபின்பு, அந்த அடிமைப் பெண், ஒரு அடிமை என்ற நிலையில், கீழ்ப்படிந்திருக்கும் தனது சரியான இடத்தில் இருக்க வேண்டும்.

சாராயின் வேலைக்காரியான ஆகாருக்கு, இஸ்மவேல் என்ற மகன்

பிறந்தான், ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பின்சந்ததியார்கள் அவன் மூலமாகத் தோன்றமாட்டார்கள் என்பதைத் தேவன் தெளிவாக்கி யிருந்தார் (ஆதியாகமம் 16:7-16; 17:20, 21). இஸ்மவேல் பிறந்தபின்பு, சாராய் கசப்புள்ளவளாகி, ஆகாரையும் அவளது மகனையும் தங்கள் வீட்டில் இருந்து ஆபிராம் துரத்திவிட வேண்டும் என்று விரும்பினாள். சாராயின் பொறாமை ஆபிராமுக்குக் கடினமான மனச்சோர்வை ஏற்படுத் திற்று, அவர் ஏற்கனவே நிலவியிருந்த சிரமங்களை இன்னும் கூடுதலாக்கிக் கொள்ள விரும்பாதிருந்தார்.

ஆபிராமுக்கும் சாராயிக்கும், தேவன் ஒரு மகனைக் கொடுப்பதாகத் தாம் அளித்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதாக மறுஉறுதிசெய்தார். அவர்களின் பெயர்களை மாற்றியதன்மூலம் அவர்களை அவர் ஊக்கப்படுத் தினார். “ஆபிராம்” என்பது “ஆபிரகாம்” என்று மாற்றப்பட்டது (ஆதியா கமம் 17:5), மற்றும் “சாராய்” என்பது “சாராள்” என்று மாற்றப்பட்டது (ஆதியாகமம் 17:15). ஆபிரகாம் உண்மையில் “பல மக்களினங்களுக்குத் தந்தை” ஆவார் என்பதும், சாராள், இந்த மக்களினங்களுக்குத் தாயாவாள், தேவனுக்கு முன்பாக “இளவரசியாக” இருப்பாள் என்பதும் இதன் தனிச் சிறப்பாக இருந்தது.

அத்துடன் கூடுதலாகத் தேவன், ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் ஒரு மகனைக் கொடுப்பார் என்ற தமது வாக்குத்தத்தத்தை, தேவன் ஆபிரகா முடன் ஏற்படுத்தியிருந்த “உடன்படிக்கையின் அடையாளம்” ஒன்றை நிலைநாட்டியதன்மூலம் உறுதிப்படுத்தினார் (ஆதியாகமம் 17:1-14). அவர், ஆபிரகாமின் வீட்டில் உள்ள ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய் விக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்:

> எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன் படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண் பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்; உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமா யிருக்கும். உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம்நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் (ஆதியாகமம் 17:10-12).

ஆபிரகாமுக்கு ஒரு மகன் பிறப்பதற்கு முன்பாகவே அவர்மீது தேவன், உடன்படிக்கையின் குறிப்பிட்ட கடமைகளை வைத்தார். உடன்படிக்கையின் அடையாளமாக ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய்விக்கப்பட வேண்டும் என்று ஆபிரகாமுக்குக் கூறப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் இருந்து, ஒவ்வொரு ஆண்பிள்ளையும் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்விக்கப்பட வேண்டியதாயிருந்தது. உடல்ரீதி

யான இந்த விருத்தசேதனம் ஆவிக்குரிய தனிச்சிறப்பைக் கொண்டதாக இருக்கும்; ஆபிரகாமின் இனத்தில் பிறந்த ஒவ்வொரு ஆண்பிள்ளையும் தன்மீது ஒரு அடையாளத்தைக் கொண்டிருக்கும் என்பது, அவன் தேவனுடைய உடன்படிக்கையின் பகுதியாக உள்ளான் என்று சுட்டிக்காண்பிக்கும்.

இந்தக் காலகட்டத்தில் தேவன் இந்த அடையாளத்தைத் தொடங்கி வைத்ததற்கு, ஆபிரகாமை ஈசாக்கின் பிறப்பிற்காகத் தயார் செய்தல் என்பது ஒரு காரணமாக இருந்தது. இந்த மகன், உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் முக்கியத்துவம் வாய்ந்தவராக இருப்பார். ஆபிரகாம், சாராள் மூலமாகத் தமக்குப் பிறக்கவிருக்கும் மகன்மீது உடன்படிக்கையின் இந்த அடையாளத்தை இடுவதன்மூலம் உடன்படிக்கையைத் தொடரத் தயாராயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

இஸ்மவேல் பிறப்பதற்கு முன்பு நீண்டகாலம் காத்திருக்க வேண்டி யிருந்ததென்று ஆபிரகாம் நினைத்தார், ஆனால் வாக்குத்தத்தத்தின் மகன் வந்துசேருவதற்கு முன்பு அவர் இன்னும் பதினான்கு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. கடைசியாக, ஆபிரகாமுக்கு தொண்ணூற்றொன்பது வயதானபோது (ஆதியாகமம் 17:1), அவரிடத்தில் தேவன், ஈசாக்கின் வருகையைப் பற்றிக் குறிப்பாகப் பேசினார் (ஆதியாகமம் 17:15-19; 18:10-15). இருப்பினும், இந்த வேளையில், ஆபிரகாமும் (ஆதியாகமம் 17:17) சாராளும் (18:12-15), தாங்கள் ஒரு மகனைப் பெற்றெடுக்க முடிவது பற்றித் தங்கள் இருதயங்களில் சிரித்துக்கொள்ளும் அளவிற்கு, பல ஆண்டுகள் கடந்திருந்தன. அவர்களின் விசுவாசம் நலிந்து போயிருந்தது.

ஆபிரகாமுக்கு நூறுவயதும் சாராளுக்குத் தொண்ணூறு வயதும் ஆகியிருந்தபோது ஈசாக்கு பிறந்தார். ஆபிரகாமுக்கு ஒரு மகனைத் தருவதாகத் தேவன் வாக்களித்து இருபத்து ஐந்து ஆண்டுகளாகியிருந்தன.

ஆபிரகாமுக்கு ஒரு மகனைத் தருவதற்கு முன்பு தேவன் இருபத்து ஐந்து ஆண்டுகள் காத்திருந்தது ஏன்? அனேகமாக, இரண்டு காரணங்கள் தரப்பட முடியும். முதலாவது, இந்தத் தாமதம் ஆபிரகாமின் விசுவாசத்திற்கு ஒரு பிரதானமான சோதனையை அமைத்திருந்தது. இவ்வளவு காலத் திற்குப் பின்பும் தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று ஆபிரகாம் இன்னமும் விசுவாசித்திருக்க முடியுமா? நாம் கவனித்த மாதிரியாக, அவரது விசுவாசம் ஓரளவுக்கு நலிந்து போயிருந்தது, ஆனால் மேம்பாடுகள் எல்லாவற்றின் கண்ணோக்கில், அது தீவிரமான சரிவினால் துன்புற்றிருக்கவில்லை. இரண்டாவது, இந்த தாமதம் ஆபிரகாமை, தம்மில் இருந்து புறப்படும் மக்களினம் தேவனிடத்தில் இருந்து மாத்திரமே வரும் என்று உணர்ந்தறியச் செய்வதற்கானதாக இருந்தது. சாராள் இயல்பாகக் குழந்தை பெற்றுக்கொள்ளும் காலத்தைக் கடக்கும் வரையில் தேவன் காத்திருந்தார், அதன்மூலம் அவர் ஆபிரகாமுக்குத் தாம் வாக்களித்திருந்த சந்ததிகள் உண்மையிலேயே இயற்கைக்கு மாறான துவக்கத்தைக் கொண் டிருப்பார்கள் என்பதை அவர் செயல்விளக்கப்படுத்த முடிந்திருந்தது. ஈசாக்கு, ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் பிறந்திருப்பினும், தனிச்சிறப்பான

*வகையில் தேவனுடைய பிள்ளையாக இருந்தார். ஆதியாகமம் 21:1-4 பின்வருமாறு கூறுகிறது,*

> *கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார். ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டான். தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே, ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்.*

*மேலும் நாம் எபிரெயர் 11:11, 12ல் பின்வருமாறு வாசிக்கின்றோம்,*

> *விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மை யுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்ற வளாயிருந்தும் பிள்ளைபெற்றாள். ஆனபடியால், சரீரஞ்செத்தவ னென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப் போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்.*

*கடைசியில் நீண்டகாலத்திற்குப் பின்பு, ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் ஒரு மகன் பிறந்தான். இந்த மகனுக்குத் தேவனால் நியமிக்கப்பட்டதும், "நகைப்பு" என்று அர்த்தம் தருவதுமான, ஈசாக்கு என்னும் பெயர் அளிக்கப் பட்டது.*

*ஆபிரகாம் தமது விசுவாசத்தில் சிறிதே துவண்டிருந்தார், ஆனால் அவர் தொடர்ந்து விசுவாசித்தார். அவர் விஷயங்களைத் தமது சொந்த கரங்களில் எடுத்துக்கொண்டு, தேவன் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொள்ள அவருக்கு உதவுவதற்கு முயற்சிசெய்தார், ஆனால் அதைத் தேவன் அனுமதிக்கவில்லை. ஆபிரகாமின் வாழ்வு, உண்மையான விசுவாசமானது தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதை யாவது குறைந்தபட்சம் செயல்விளக்கப்படுத்துகிறது.*

*எனவே, தேவனுடைய வசனத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பது விசுவாசத்தின் இரண்டாம் பகுதிப்பொருளாக உள்ளது. விசுவா சத்தின் அதிகாரத்துவமான எந்த நடையும், தேவனுடைய வசனத்தின்மீது நம்பிக்கையாக இருத்தலை உள்ளடக்கும். இதற்கு ஒரு விவரிப்பாக நாம் ஞானஸ்நானம் பற்றிய கட்டளையை எடுத்துக்கொள்வோம். நீங்கள் எப்போதாவது, ஞானஸ்நானம் பற்றி யாரேனும் ஒருவர், "தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுவது இரட்சிப்பைக் குறித்துச் சிலவற்றைச் செய்ய முடிவது எவ்வாறு என்பதை நான் காண்பதில்லை" என்று கூறக் கேட்டிருக் கின்றீர்களா? அதை நாம் காணும்படி தேவன் நம்மிடம் கேட்பதில்லை - அதை நாம் விசுவாசிக்கும்படியே தேவன் நம்மிடம் கேட்கின்றார் என்பதே அந்த விஷயம் பற்றிய சத்தியமாக உள்ளது! (மாற்கு 16:15, 16; நடபடிகள்*

2:38; 22:16). அவர் ஆபிரகாமுக்கு எவ்வாறு ஒரு மகனைக் கொடுப்பார் என்று காணும்படி ஆபிரகாமிடம் கேட்கவில்லை - அதை ஆபிரகாம் விசுவாசிக்க வேண்டும் என்றே அவர் கேட்டுக்கொண்டார்!

ஒருவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மீது நிலைநிற்பதற்கு மிகத்தெளிவான இடங்களில் ஒன்றாக ஞானஸ்நானத்தின் தண்ணீரில் உள்ளது. முழுக்காட்டுதல் என்பது உடலைக் கழுவுவதோ அல்லது சரீரப்பிரகாரமாகக் குணமாக்குவதோ இல்லை. அது உடலைத் தண்ணீருக்குள் கஷ்டமின்றி முழுக்காட்டுதலாக மாத்திரம் உள்ளது. ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய தேவனுடைய வாக்குத்தத்தம்தான் அதை மதிப்புள்ளதாக்குகிற ஒரே விஷயமாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதற்குக் கண்ணால் காணக்கூடிய பதில்செயல் எதையும் நாம் உணர்ந்தறிவதில்லை - பரலோகத்தில் இருந்து நாம் கேட்கக்கூடிய குரலொலியோ, தண்ணீரில் இருந்து வெளியே வருபவர்களைச் சுற்றி தெய்வீகச் சுடரொளி பிரகாசித்தலோ, ஞானஸ்நானம் பெற்றவர்மீது இயற்கைக்கு மாறான உணர்வுவருதலோ இருப்பதில்லை. எந்தவிதமான அற்புதமும் நடைபெறுவதில்லை. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்பவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைக்கின்றார், அவ்வளவுதான். அவர் அல்லது அவள், நம்பிக்கை கொண்டு தண்ணீருக்குள் சென்று நம்பிக்கைகொண்டு தண்ணீரில் இருந்து வெளியே வருகின்றார்/வருகின்றாள். ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக் கேற்ற விசுவாசத்தின் செயல்பாடாக உள்ளது. புதிய கிறிஸ்தவர் தண்ணீரில் இருந்து வெளியே வரும்போது, பரலோகத்தின் தேவன் தமது வசனத்தைக் காத்துக்கொண்டிருக்கிறார் என்றும், அந்த நபரின் பாவங்களை இயேசுவின் இரத்தத்தினால் கழுவினர் என்றும் நாம் நம்புகின்றோம்.

ஒருவர் தேவனுடன் நடக்கத் தேர்ந்துகொள்ளும்போது, அவர் விசேஷித்த அடையாளங்களினாலோ, வழக்கத்திற்கு மாறான உணர்வுகளி னாலோ, அல்லது இயற்கைக்கு மேலான வழிநடத்துதலினாலோ அல்ல, ஆனால் தேவனுடைய வசனத்தினால் தேவனுடன் கட்டுவிக்கப்பட் டிருக்கத் தீர்மானிக்க வேண்டும். இவ்வகையான நடைக்கு, தேவனுடைய வசனத்தின்மீது அன்றாடம் நம்பிக்கை கொண்டிருப்பதன் மூலமாக தேவனுக்குள் அன்றாடம் நம்பிக்கை கொண்டிருத்தல் தேவை என்பது தெளிவு.

## கொடுத்தலுக்கான சோதனை

ஈசாக்கு பிறந்து சிலகாலம் ஆனபின்பு, ஆபிரகாம் தமது மூன்றாவது சோதனையை எதிர்கொண்டார்: கொடுத்தலுக்கான சோதனை. ஆபிரகாமின் மகனான ஈசாக்கைத், தேவன் தமக்கு பலியாக ஒப்புக்கொடுக்கும்படி கேட்டார். இந்த சோதனையானது ஆபிரகாமுக்கு, விசுவாசத்தின் மிகமேன்மையான சோதனையாக இருந்தது.

இந்த கட்டளையின்போது ஈசாக்கு எவ்வளவு வயதுடையவராய் இருந்தார் என்று வேதாகமம் நமக்குக் கூறுவதில்லை. ஒருவேளை அவர் பத்து வயதுக்கு மேற்பட்டிராதவராக இருந்திருக்கலாம். அவர் தமது

தந்தையோடு கீழ்ப்படிதலுடன் சென்றார், எந்தவித மறுப்பும் இன்றி தம்மைக் கட்டிப்போடவும் அவரை [ஆபிரகாமை] அனுமதித்தார். "தகன பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?" (ஆதியாகமம் 22:7) என்ற அவரது கேள்வி, அவர் பகுத்தறியும் அளவுக்கு வயதுடையவராக இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. மேலும் அந்தக் கேள்வியானது, அவர் மலையைச் சென்று அடைதலுக்கு முன்பு அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்று தோன்றவில்லை என்பது அல்லது மலைக்குப் புறப்படுவதற்கு முன்பு இந்தத் தகவலை அவரிடத்தில் ஆபிரகாம் பகிர்ந்துகொள்ளாத அளவுக்கு இளையவராய் இருந்தார் என்பதையும் காண்பிக்கிறது.

தேவன் ஆபிரகாமுக்கு ஈசாக்கைப் பலிசெலுத்தும்படி கட்டளையிட்ட போது, அவர் ஒரு காயத்தில் உப்பை வைத்துத் தேய்ப்பது போன்று தம்முடைய கட்டளையில் "[ஆபிரகாமை] தேய்த்தார்" என்று ஏறக்குறையத் தோன்றுகிறது. வேதனையை அதிகப்படுத்தும்படியாகவும் அந்தக் கட்டளையில் உள்ள பலியை வலியுறுத்தும்படியாகவும் வார்த்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் காணப்படுகிறது:

> அப்பொழுது அவர்: "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேச குமாரனாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப்போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்" (ஆதியாகமம் 22:2).

தேவன், "ஈசாக்கைக் கூட்டிக்கொண்டுபோ" என்று மட்டும் கூறவில்லை. அவர் அந்த மகனைப் பற்றி மூன்று அன்பார்ந்த வழிகளில் குறிப்பிட்டார். அவர், "உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேசகுமாரனாகிய, ..." என்று கூறினார்.

இந்தக் கட்டளையைப் பற்றி ஆபிரகாம் என்ன நினைத்தார் என்பது நமக்குக் கூறப்படவில்லை. ஆபிரகாமைச் சுற்றிலும் இருந்த புறதெய்வத்தை ஆராதிக்கும் மக்களினங்கள், குழந்தையைப் பலியிடுவதில் ஈடுபட்டிருந்தனர். அது அரிதானதாக இருந்தது, ஆனால் அது செய்யப்பட்டு வந்தது. ஆபிரகாம், "என்னைச் சுற்றிலும் உள்ள புறதெய்வ வணக்கத்தார் தங்களுடைய தெய்வங்களுக்கு ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாய் இருப்பது போன்று, நான் தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தல் உள்ளவனாக இருப்பதைக் காண்பிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரா" என்று நினைத்தாரா? அவர் என்ன நினைத்தார் என்று நாம் அறிவதில்லை, ஆனால் அவர் தமக்குத் தேவன் கட்டளையிட்டதைச் செய்வதற்கு உடனடியாகப் புறப்பட்டார் என்பதை நாம் அறிவோம்.

இதுபோன்றே ஒரு கட்டளையைத் தேவன் ஏன் கொடுத்தார்? மோரியா மலையில் நடந்தவற்றைப் பற்றி வாசிப்பதில் இருந்து, நாம் தேவன் மனித பலியை விரும்பியதில்லை என்று அறிகின்றோம். ஆபிரகாம் தமக்கிருந்த மிகவும் அன்பான மற்றும் மிகவும் விலையேறப்பெற்ற உடைமையை [மகனைத்] தேவனுக்கென்று கொடுப்பதன்மூலம், அவர்மீது தாம் கொண்டிருந்த முழுமையான

நம்பிக்கையை செயல்விளக்கப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்பியிருக்கலாம். தேவன் சாராளை அல்ல, ஆனால் ஈசாக்கைக் கேட்டார், ஏனெனில் அவர் ஆபிரகாமுக்கு ஏற்படுத்தி யிருந்த வாக்குத்தத்தங்கள் யாவும் ஈசாக்குக்குள் கட்டுவிக்கப்பட்டிருந்தன. மற்றும், தேவன் ஆபிரகாமின் மகனை மாத்திரம் கேட்டிருக்கவில்லை. அவர் ஆபிரகாமின் இருதயத்தையும் எதிர்காலத்தையுமே கேட்டிருந்தார் - அவர் ஆபிரகாம் தமக்கிருந்த எல்லாவற்றையும் கொடுக்கும்படி கேட்டார்.

ஆபிரகாம் என்ன செய்தார்? அவர் இந்தக் கட்டளையைப் பெற்றுக் கொண்டபின்பு, உடனடியாக மரத்தையும்/விறகையும், நெருப்பையும் சேகரித்துக்கொண்டு, பயணத்திற்குத் தேவைப்படும் வேலைக்காரர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு, பலிசெலுத்தப்பட வேண்டிய இடமான மோரியா மலையை நோக்கிய மூன்று நாள் பயணத்தைத் தொடங்கினார். அவர்கள் அந்த மலையின் அடிவாரம் சென்று சேர்ந்தபோது, ஆபிரகாம் “நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்” என்ற வார்த்தைகளுடன் (ஆதியாகமம் 22:5) வேலைக்காரர்களை அங்கேயே விட்டுச் சென்றார். ஆபிரகாம் தமது ஒரே மகனைப் பலிபீடத்தின்மீது பலியிடும் அளவுக்குத் தேவனை மிகுந்த தைரியத்துடன் விசுவாசித்தார். அவர் ஈசாக்கின் மூலமாகத் தேவன் செய்வதாக வாக்களித்திருந்தவற்றை நிறைவேற்றுவதற்கு, ஈசாக்கு மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கும் அளவுக்குத் தேவனை முழுமையாக நம்பினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இந்த நிகழ்ச்சி பற்றிய தமது விவரிப்பில், ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய ஆழத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றார்:

> மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். “ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்” என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான் (எபிரெயர் 11:17-19).

ஆபிரகாமும் ஈசாக்கும் மலையின் உச்சியை அடைந்தபோது, ஆபிரகாம் பயன்படுத்துவதற்கான பலிபீடத்தை அமைதியாகக் கட்டியெழுப்பியிருக்க வேண்டும். கல்லின்மீது கல்லாகக் குவித்து, அவர் அதைத் திடமானதாகவும் பலமானதாகவும் கட்டினார். ஈசாக்கைப் பலியிடும் செயலை அவர் உண்மையில் எவ்வாறு செய்தார் என்று நாம் அறிவதில்லை. ஒருவேளை அவர் ஈசாக்குடன் அமர்ந்து, தமது கைகளை அவரது தோள்மீது போட்டு, “ஈசாக்கு, தேவன் எனக்குக் கட்டளையிட்ட சிலவற்றை நான் செய்யப்போகின்றேன். அதை நான் புரிந்துகொள்ளவில்லை, ஆனால் எல்லாம் சரியாகிவிடும். தேவன் நம்பிக்கை வைக்கப்படக்

*கூடியவராக இருக்கிறார். தேவன்மீது நம்பிக்கையாக இருக்க வேண்டும் என்றுதான் உன் வாழ்நாள் முழுவதிலும் நான் உனக்குப் போதித்தேன். இப்போது நாம் அவர்மீது முழுமையாக நம்பிக்கை வைக்க வேண்டும். நாம் அவரில் முழுமையாக விசுவாசம் கொண்டால் நம் இருவரைக் குறித்தும் அவர் அக்கறை எடுத்துக்கொள்வார். நான் உன்னைக் கட்டி இந்தப் பலி பீடத்தின்மீது வைக்கப்போகின்றேன், ஆனால் பயப்படாதே, ஏனெனில் தேவன் உன்னைக் குறித்து அக்கறை எடுத்துக்கொள்வார்" என்று கூறியிருக்கலாம்.*

*அவர்களின் உரையாடலுக்குப் பின்பு, ஆபிரகாம் ஈசாக்கைக் கட்டி பலிபீடத்தின்மீது மென்மையாக வைத்தார். ஈசாக்கு வேதனையை உணராதபடி அதை விரைவாகச் செய்யும்படிக்கு அவர் விரும்பியிருக்கலாம். அவர் தமது கத்தியை எடுத்தார். அதை அவர் கீழே கொண்டுவரத் தயாரான வேளையில் அது சூரிய ஒளியில் பளபளத்தது. அவர் கத்தியை ஓங்கிய மற்றும் அதைத் தாழ்த்திய வினாடிக்குறைவான வேளையில், வானத்தில் இருந்து அவரை அழைத்த குரலானது, "ஆபிரகாமே, ஆபிரகாமே! ... பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படு கிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்று கூறிற்று (ஆதியாகமம் 22:11, 12). ஆபிரகாம், கொடுத்தலின் சோதனையில் விசுவாச நிறைவுடனும் பற்றுறுதியுடனும் தேர்ச்சியடைந்தார். அவர் பூமிக்குரிய வகையில் தமக்கு மிகவும் அன்பார்ந்த உடைமையை, தமக்கிருந்த யாவற்றையும் பலிபீடத்தில் வைத்துத் தேவனுக்கு அர்ப்பணித்தார்.*

*ஆபிரகாம் செய்த செயலின் தனிச்சிறப்பானது எந்த வாசகராலும் உடனடியாக உணர்ந்தறியப்படுகிறது. முதலாவது, ஆபிரகாம் இந்தப் பலியில் தேவனுக்குத் தமது முழு இருதயத்தை, தமது ஆத்துமாவினுடைய அன்பை ஒப்புக்கொடுத்தார். இரண்டாவது, அவர் இந்தப் பலிக்குப் பின்பு தமக்குத் தேவன், ஈசாக்கின்மூலம் நிறைவேற்றுவதாக ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்காக, அவர் ஈசாக்கைத் திரும்பவும் கொடுப்பார் என்று அவர்மீது நம்பிக்கை கொண்டிருந்தார்.*

*இந்த நிகழ்ச்சியில் தேவன் ஆபிரகாமுக்குச் செய்திருந்தது என்ன என்பது, தேவனிடத்திற்கு மாற்றப்பட்ட ஒரு மனிதனைப் பற்றிய கற்பனைக் கதையின்மூலம் விவரிக்கப்படுகிறது. அவரது மனமாற்றத் தி ற்குப்பின் சற்றுக்காலத்தில், அவரிடத்தில் தேவன், "உன்னிடம் உள்ளது என்ன?" என்று கேட்டார். அவர் "என்னிடம் ஒரு வீடு உள்ளது" என்றார். தேவன், "அது எனக்கு வேண்டும்" என்று கூறினார். மீண்டும் அவரிடத்தில் தேவன், "உன்னிடம் வேறு என்ன உள்ளது?" என்று கேட்டார். "என்னிடம் ஒரு காரும் வங்கியில் பணமும் உள்ளன" என்று அம்மனிதர் கூறினார். தேவன், "அந்தக் காரும் வங்கியிலுள்ள அந்தப் பணமும் எனக்கு வேண்டும்" என்றார். பின்பு தேவன், "உன்னிடம் வேறு என்ன உள்ளது?" என்று கேட்டார். அதற்கு அவர், "இப்போது என்னிடத்தில் இருப்பதெல்லாம் என் மனைவியும் இரண்டு பிள்ளைகளுமே" என்றார். தேவன், "உன் மனைவியும்*

உன் இரண்டு பிள்ளைகளும் எனக்கு வேண்டும்'' என்றார். தேவன் "உன்னிடம் வேறு என்ன உள்ளது?'' என்று கேட்டார். அதற்கு அம்மனிதர், "இப்போது என்னைத் தவிர வேறெதுவும் என்னிடத்தில் இல்லை'' என்றார். தேவன், "நீயும் எனக்கு வேண்டும்'' என்றார். அதற்கு அம்மனிதர், ''சரி ஆண்டவரே, இப்போது நீர் என்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் என்னிடத்தில் உள்ள எல்லாரையும் கொண்டிருக்கின்றீர். இப்போது என்ன?'' என்றார். அதற்கு தேவன், "அவையெல்லாவற்றையும், அவர்கள் எல்லாரையும், வேறு வகையில் பயன்படுத்துவது ஞானமாவது என்று நான் நியமிக்கும் வரைக்கும், அவற்றையும் அவர்களையும் நீ எனது மகிமைக்காகப் பயன்படுத்தும்படி உனக்குத் திருப்பித் தருவேன்'' என்றார். இதைத்தான் தேவன் ஆபிரகாமுக்குச் செய்தார்.

இவ்விடத்தில் இன்னொரு சத்தியம் காணப்படுகிறது: ஆபிரகாம் தமது மகனைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தபோது, தேவன் அந்த ம கனை அவருக்கு என்றென்றைக்குமாகத் திரும்ப அவருக்கே கொடுத்தார். பிற்பாடு, புதிய ஏற்பாட்டில் இயேசு, தேவனைப் பற்றி, "ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும்'' தேவனாயிருக்கிறார் என்று உரைத்தார். இயேசு இருந்தார் என்றல்ல, ஆனால் இருக்கிறார் என்று உரைத்தார். இயேசு இவ்வார்த்தைகளை உரைத்தபோது, அவர்கள் மூவரும் தேவனுடன் நித்தி யத்தில் இருந்தனர் (மத்தேயு 22:32).

பின்வருவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: நாம் தேவனுக்குக் கொடுப்பவற்றையே நம்மிடத்தில் காத்துக்கொள்கின்றோம். வீடுகள், நிலங்கள், பணம் - மற்றும் கணவர்கள், மனைவியர்கள், அல்லது பிள்ளைகள் ஆகியோரின்மீதுகூட - அவைகள்/அவர்கள் எவ்வளவு விலையேறப்பெற்றுக் காணப்பட்டாலும், வாழ்வு என்பது அவற்றின்மீது நிலைபெற்றிருப்ப தில்லை. தேவனுடன் விசுவாசத்தில் நடப்பதினால்தான் உண்மை யான வாழ்வு காணப்படுகிறது. அப்படிப்பட்ட நடையானது தேவனை மகிமைப்படுத்துகிறது மற்றும் நமது பிற உறவுமுறைகள் யாவற்றையும் முன்னுரிமைப்படுத்துகிறது.

எனவே, இவ்விடத்தில், விசுவாசத்தின் மூன்றாவது பகுதிப்பொருள் உள்ளது: தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல். தேவனுடைய அன்பு கொடுக்கும் அன்பாக உள்ளது, ஏனெனில் அவர் சுயமற்ற தேவனாக, அன்புகூரும் தேவனாக, எப்போதும் நம்முடன் பகிர்ந்துகொள்வதாலும் நமக்குக் கொடுப்பதாலும் நம்மை ஆசீர்வதிக்க நாடும் தேவனாக இருக்கிறார். அன்புகூரும் இந்தத் தேவனுடன் நடத்தலுக்கு, நமது பங்கை, தியாகமான கொடுத்தலைக்கூட ஒப்புக்கொடுத்தல் அவசியமாயிருக்கிறது. உண்மை யிலேயே விசுவாசத்தில் நடந்துகொள்ளும் எவரும், பெருந்தன்மை, சேவித்தல், மற்றும் கொடுத்தல் என்பவை இல்லாதிருக்க இயலாது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாபெரும் [பொருளாதார] வீழ்ச்சிக் காலத்தின்போது, ஒரு செல்வந்தர் நடபடிகள் 2:38ஐ மேற்கோள் காண்பிப்பதை நேசித்தார். மற்றவர்களுக்கு ஞானஸ்நானத்தின் முக்கியத்து வத்தைக் காண்பிப்பதற்காக, அவர் அதை அடிக்கடி குறிப்பிடுவார். இருப்பினும், ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளின், காணிக்கைத்

தட்டு மக்களிடம் கடந்து வரும் வேளையில் அவர் அதில் பத்துப் பைசா மாத்திரமே இடுவார். அந்த வேளையில் சபை அல்லாடிக்கொண்டிருந்தது, அவர் உதவுவதற்குப் பொருள் கொண்டிருந்தார்; ஆனால் அவர் தொடர்ந்து பத்துப் பைசா மாத்திரம் கொடுத்துக்கொண்டிருந்தார். அவரால் நடபடிகள் 2:38ஐ மேற்கோள் காண்பிக்க முடிந்திருந்தது, ஆனால் அவர் அதைப் புரிந்துகொள்ளாது இருந்தார். அவர் அவ்வசனம் போதிக்கிற வகையிலான விசுவாசத்தைக் கொண்டிருக்கவில்லை. அவ்வசனமானது, உண்மை யிலேயே மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் எவரொருவரும் விசுவாசத்தில் நடக்கத் தொடங்குகின்றார் என்று போதிக்கிறது. அந்த நடையானது சுயநலமற்ற கொடுத்தல் மற்றும் வாழுதல் ஆகியவற்றை உள்ளடக்குவதாக இருக்கிறது.

## முடிவுரை

ஆபிரகாம் தேர்ச்சி பெற்ற இம்மூன்று சோதனைகளும், உண்மையான விசுவாசம் எது மற்றும் அது ஒரு நபருடைய இருதயத்தில் எவ்வாறு இயங்கு கிறது என்பதை நாம் காண்பதற்கு உதவுகின்றன. விசுவாசம் என்பது, தேவனுடைய வசனங்களை ஏற்றுக்கொண்டு, நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றுடன் அவ்வசனங்களின்படி செயல்படுதல் என்பதாக உள்ளது. அப்படிப்பட்ட விசுவாசமானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட முடியும்: விட்டுவிடும்படி தேவன் நம்மிடம் கூறுபவற்றை விட்டுவிடுதல், தேவனு டைய கட்டளைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்தல், மற்றும் நமது வாழ்வையும் நமது உடைமைகளையும், தேவன் அறிவுறுத்தியுள்ளபடி அவருக்கென்றும் அவருடைய ஊழியத்திற்கென்றும் ஒப்புக்கொடுத்தல்.

நீங்கள் எப்போதாவது, ஒரு வகையான சிறு பாலத்தின் குறுக்கே நடக்கத் தொடங்கி, ஆனால் அது உங்கள் எடையைத் தாங்காது என்று நீங்கள் நினைத்திருந்ததால் தயங்கியதுண்டா? ஒருவேளை நீங்கள் சிறிது வெளியே சென்று அதன் பலத்தைப் பரிசோதித்திருக்கலாம். கடைசியில், நீங்கள் அதன் மறுபுறம் நோக்கி மெதுவாக நடந்திருக்கலாம். உங்கள் எடையைத் தாங்கக்கூடிய அதன் திறன் பற்றி நீங்கள் உறுதிப்படுத்திக் கொண்டவுடனே, நீங்கள் உறுதிப்பாட்டுடன் முன்னும் பின்னுமாக அப்பாலத்தின் குறுக்காகத் திரும்பத் திரும்ப நடக்கக்கூடும். விசுவாசத் தினால் வாழுதல் என்பது உண்மையில் அதைப்போன்ற விஷயமாகவே உள்ளது. நீங்கள் தேவனுடைய வசனத்தின் சாட்சியத்தை ஏற்றுக்கொள் கின்றீர்கள், மற்றும் நீங்கள் தேவனிடத்தில் இருந்து வந்த அந்த சத்தி யத்தின்மீது உங்கள் எடை முழுவதையும் வைக்கின்றீர்கள். நீங்கள் அந்த சத்தியத்தின்மீது நின்று, அந்த சத்தியத்தின்படி வாழ்ந்து, அந்த சத்தி யத்தின்மீது சார்ந்திருந்து நித்தியத்திற்குள் செல்லுகின்றீர்கள். தேவனுடைய வசனத்தின் சத்தியம் என்பதே நீங்கள் தேவனிடத்திற்குச் செல்லும் பாலமாக உள்ளது. விசுவாசத்தின் நடை என்பது, உணர்வுகள், யூகங்கள் அல்லது கற்பிதம் செய்யப்பட்ட அடையாளங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதல்ல. அது தேவனுடைய வசனம் என்ற பாலத்தின் நடுவில்

*நேராக நடத்தலாக உள்ளது.*

*நீங்கள், "இப்படிப்பட்ட நடைக்கு வெகுமதிகள் எவையேனும் உள்ளனவா?" என்று கேட்கலாம். ஆம், விசுவாசம் நிறைந்துள்ள நபர் தனிச்சிறப்பான இரண்டு வெகுமதிகளைப் பெறுகின்றார். அவர் அல்லது அவள், தேவனுடைய ஆசீர்வாதங்களை மாத்திரமல்ல, ஆனால் தேவனையேகூடப் பெற்றுக்கொள்கின்றார்[ள்]. தேவன் நமது வெகுமதியாகவும் நமது மீட்பராகவும் இருக்கின்றார். தேவனே, தேவனிடத்தில் இருந்து நமக்குக் கிடைக்கும் மாபெரும் கொடையாக இருக்கிறார். ஆதியாகமம் 15:1ல் ஆபிரகாமிடம் தேவன், "ஆபிரகாமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்று கூறினர். ஆபிரகாம் தேவனுடன் நடக்கையில், அவர் தேவனுடைய ஆசீர்வாதங்களை மாத்திரமல்ல, ஆனால் ஆசீர்வதிப்பவரான தேவனையும் பெற்றுக்கொண்டார். அதே அழைப்பு நம் ஒவ்வொருவருக்கும் தரப்படுகிறது. தேவன், "வந்து என்னுடன் நடவுங்கள், நான் எனது பிரசன்னத்தையும் எனது அளிப்புகளையும் உங்களுக்குத் தருவேன்" என்று கூறுகிறார். நீங்கள் விசுவாசத்தின் நடையைத் தொடங்குவீர்களா?*

**கற்க வேண்டிய பாடம்:**
**தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டு**
**அதன்படி நடத்தலே விசுவாசம் என்பதாக உள்ளது.**

---

குறிப்புகள்

[1]*பழைய ஏற்பாடு, ஆபிரகாம் ஆரானில் இருந்து தெய்வீகத்தால் அழைக்கப்பட்டார் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது (ஆதியாகமம் 12:1); புதிய ஏற்பாட்டில், ஸ்தேவானின் உரையானது (நடபடிகள் 7:2, 3) ஆபிரகாம் ஊர் என்ற நகரத்தில் தெய்வீகத்தால் அழைக்கப்பட்டார் என்று குறிப்பிடுகிறது. தேவன் ஆபிரகாமை முதன்முதலாக எவ்விடத்தில் இருந்து அழைத்தார்? அது ஊர் என்ற இடத்தில் இருந்தா அல்லது ஆரானில் இருந்தா? ஆபிரகாம் தமது முதல் அழைப்பை ஊர் என்ற இடத்தில் இருந்து பெற்றுக்கொண்டார் என்பது பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் 15:7 மற்றும் நெகேமியா 9:7 ஆகிய வசனங்களில், மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது. மற்றும் இது புதிய ஏற்பாட்டில் நடபடிகள் 7:2, 3ல் வெளிப்படையாக உரைக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக அவர் இரு அழைப்புகளைப் பெற்றார், அவற்றில் முதலாவது ஊர் என்ற இடத்திலும் பின்பு, பிந்தியது ஆரான் என்ற இடத்திலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.* [2]John J. Davis, *Paradise to Prison: Studies in Genesis* (Grand Rapids, Mich.: Baker Book House, 1975), 160. [3]Gene A. Getz, *Abraham* (Ventura, Calif.: Regal Books, 1976), 11. [4]*அதாவது, ஐப்பிராத்து நதி. வசனங்கள் 3, 14, மற்றும் 15 ஆகியவற்றிலும் காணவும்.* [5]*ஐந்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில், ஆபிரகாம் தேவனிடத்தில் இருந்து வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொண்டார், அவைகள், ஒன்றுகூட்டப்பட்டு, தேவன் ஆபிரகாமுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை என்று அழைக்கப்படுவதில் அடங்கியுள்ளன. முதலாவது, ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு வந்து சேருவதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சியாகும் (ஆதியாகமம் 12:1-3); இரண்டாவது, அவரிடத்தில்*

*இருந்து லோத்து பிரிந்துபோன பின்பு நடந்தது (ஆதியாகமம் 13:14-17); மூன்றாவது, ஆபிரகாம் நான்கு அரசர்களிடமிருந்து லோத்துவை விடுவித்த பின்பு நடந்தது (ஆதியாகமம் 15:1-21); நான்காவது, ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதுடையவராய் இருந்தபோது சோதோமின் அழிவுக்குச் சற்றே முன்னதாக நடந்தது (ஆதியாகமம் 17:1-22); மற்றும் ஐந்தாவது, பல ஆண்டுகளுக்குப் பின்பு, ஈசாக்கைப் பலியிடும்படி தேவன் கட்டளையிட்டதை [மற்றும் அவர் அதைச் செய்து முடித்ததை]த் தொடர்ந்து நடந்தது (ஆதியாகமம் 22:15-18). இந்த ஐந்து வேளைகளிலும் தேவன் என்ன கூறினார் என்பதை ஆராய்ந்து பார்க்கையில், வாக்குத்தத்தத்தின் மூன்று முக்கிய பகுதிகள் காணப்பட முடியும். முதலாவது, ஆபிரகாமின் பின்சந்ததியார் ஒரு மக்களினமாகும் அளவுக்கு வளர்ந்து பெருகுவார்கள் மற்றும் அவர்கள் தேவனுடைய விசேஷித்த மக்களாயிருப்பார்கள் (ஆதியாகமம் 12; 13:16; 15:2-5; 17:4-6; 22:17). இரண்டாவது, தேவன் ஆபிரகாமைக் கொண்டு வந்து சேர்த்த நாடு இந்த மக்களினத்தின் சொந்த நாடாகும் (ஆதியாகமம் 13:14-17; 15:18; 17:8). மூன்றாவது, அவரது சந்ததியார் மூலமாக உலகத்தில் உள்ள மற்ற மக்களினங்கள் யாவும் ஆசீர்வதிக்கப்படும் அளவுக்கு அவர்கள் இந்த உலகத் திற்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள் (ஆதியாகமம் 12:2, 3; 18:18; 22:18). இந்தக் கடைசி ஆசீர்வாதம், யூதா கோத்திரத்தின் மூலமாக மேசியா இந்த உலகத்திற்கு வந்ததன்மூலம் நிறைவேற்றப்பட்டது (கலாத்தியர் 3:16). [6]பாபிலோனின் அரசராயிருந்த ஹம்முரபி (கி.மு. 1728-1686), தமது மக்களுக்காக சட்டங்களின் குறிப்புரை ஒன்றை எழுதினார், அது இந்நாள் வரையிலும் நிலைத்திருக்கிறது. அவரது சட்டங்களின் தொகுப்பு, எஷ்னுன்னா மற்றும் லிப்பிட்-இஷ்தார் ஆகியோரின் சட்டக்குறிப்புகள் போன்ற முந்திய சுமேரிய சட்டவியல் கருத்துக்களில் இருந்து தரவழைக்கப்பட்டவைகளாய் இருந்தன. ஹம்முரபியின் சட்டக்குறிப்புகளுடைய பல பிரதிகள் ஸ்டீலே வடிவத்தில் ஏற்படுத்தப்பட்டு, அதன் பொருளடக்கங்கள் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதற்காகப் பொது இடங்களில் வைக்கப்பட்டன. முந்திய காலத்தில் இல்லையென்றாலும், கி.மு. இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளின் தொடக்கத்தில் விளைந்த, சமூக சூழ்நிலைகள், இந்தச் சட்டக்குறிப்புகளினால் தெளிவாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளன. [7]டைகிரீஸ் நதிக்குக் கிழக்கில் இருந்த நூஸி என்ற நகரத்தில் நடத்தப்பட்ட அகழ்ஆய்வுகள், பழங்காலத்திய வேதாகம நாடுகளின் பழக்கவழக்கங்களில் உட்கண்ணோட்டத்தைத் தரும் களிமண் பதிவேடுகளின் திகைக்க வைக்கும் தொகுப்பைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கியுள்ளன. இந்தப் பதிவேடுகளில் பெரும்பான்மையானவை கி.மு. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பலகைகளில் அடங்கியுள்ள பழக்கவழக்கங்களும் சட்டங்களும், எபிரெய முற்பிதாக்களின் சமூகத்தில் இருந்த பழக்கவழக்கங்கள் மற்றும் சட்டங்கள் ஆகியவற்றுடன் கவனிக்கத்தக்க வகையில் இணைவுகளைக் கொண்டுள்ளன.*

# நோவா

# மனித இனத்தைக் காப்பாற்றிய மனிதர்

டேவிட் ரோப்பர்

*வேதபாடப் பகுதி: ஆதியாகமம் 6:5-9:17*

*சில பெயர்கள் என்றென்றைக்கும் மாபெரும் நிகழ்ச்சிகளுடன் இணைவுகொண்டுள்ளன. யாத்திராகமத்தைப் பற்றி நினைக்கும்போது, நாம் மோசேயைப் பற்றி நினைக்கின்றோம். முதல் சுவிசேஷப் பிரசங் கத்தைப் பற்றி நினைக்கும்போது, நாம் பேதுருவைப் பற்றி நினைக் கின்றோம். பெருவெள்ளத்தைப் பற்றி நினைக்கும்போது, நமது சிந்தனைக்கு வருகின்றவர் யார்? நோவா - தேவனுடைய அருளிரக்கத்தால், மனித இனத்தை நிர்மூலமாவதில் இருந்து காப்பாற்றிய மனிதர்.*

*கிறிஸ்தவ யுகம் முழுவதிலும், வேதாகமத்தை வாசிப்பவர்கள், நோவாவின் வரலாற்றைக் குறித்தும் அது போதிக்கிற பாடங்களை - மற்ற யாவரும் அழிந்துபோனாலும், தேவனுக்கு விசுவாசநிறைவுடன் கீழ்ப்படி கின்றவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதைக் - குறித்து மெய்சிலிர்த் துள்ளனர். முதன்முதலாகத் துன்புறுத்தப்பட்ட விசுவாசிகள், உயிர்த் தெழுலின் நம்பிக்கையுடன் மரித்த தங்களுடையவர்களை அடக்கம் செய்திருந்த ரோமாபுரியின் இரகசியக் கல்லறைச் சுவர்கள்மீதுள்ள விவரிப்புகள், கிறிஸ்தவ விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பிரதிபலிக் கின்றன. அங்கு சித்தரிக்கப்பட்டுள்ள காட்சிகளின் மத்தியில், இருவிஷ யங்கள் காலத்திற்குக் காலம் திரும்பக் கூறப்படுகின்றன: யோனா, கடலின் ஆழத்தில் பூதம்போன்ற விலங்கினின்று தப்பித்த விஷயம், மற்றும் நோவாவும், அவரது குடும்பமும் பெருவெள்ளத்தில் உயிர்பிழைத்திருந்த விஷயம். நாமும்கூட, நோவாவின் வரலாற்றில் இருந்து ஏவுதலையும் அறிவுறுத்துதலையும் கண்டறிய முடியும். "மனித இனத்தைக் காப்பாற்றிய மனிதரின்"[1] பண்புகளை நாம் ஆராய்ந்து பார்த்து அவரை அவ்வாறு செய்யக்கூடியவராக்கியது எது என்று கண்ணோக்குவோம்.*

## *அவர் ஒரு நீதியுள்ள மனிதராக இருந்தார்*

உலகம் அக்கிரமத்தில் மூழ்கியிருந்த நாட்கள் ஒன்றில் நோவா தோன்றினார்:

*மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, ... பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள் (ஆதியாகமம் 6:5-12).*

*வேதாகமம், இந்தச் சூழ்நிலையின் ஆதாரமூலத்தைப் பற்றிக் கூறுகிறது. அந்தக் காலகட்டத்தின் துன்மார்க்கத்தை விவரிப்பதில், அது மீறுதலின் குறிப்பிட்ட செயல்களைக் கூறுவதில்லை, ஆனால் எங்கும் உள்ள மனிதர் களின் இருதயம் விஷமாகி கெட்டுப்போயிருந்தது என்று அது சுட்டிக்காண் பிக்கிறது. தேவனுடன் சஞ்சரித்திருந்த நாட்களில் இருந்து கடந்து வந்த அந்த வேளையில் மனிதன் எவ்வளவாகப் பாவத்தில் மூழ்கிப்போயிருந்தான்! இந்த வேளையில் அவன், நல்ல சிந்தனை ஒன்றையுங்கூட கொண்டிருக்க வில்லை; "அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாயிருந்தது" (வசனம் 5). "கொடுமை" என்பது, அவர்களின் மோசம்போன சூழ்நிலைக்கு ஒரு வெளிப்பாடாக இருந்தது, இது எப்போதுமே, ஒழுக்கரீதியான கேடுபாடுகளையும் ஆவிக்குரிய வீழ்ச்சி யையும் குறிப்பதாகும்.*

*இன்றைய நாட்களில் தேவன் நம்மைக் கண்ணோக்குகையில், அவர் இதைப் போன்றே பிரியமற்று இருப்பாரா என்று நான் வியப்படை கின்றேன். கொடுமை என்பது இருதயத்தின் நிலைமைக்கான ஏதாவதொரு குறிப்பாக இருக்குமென்றால், இன்றைய நாட்களில் உள்ளவர்களில் பலர் நிச்சயமாகவே அவகீர்த்தியின் அறையில் இடம்பெறத் தகுதி யானவர்களாய் இருப்பார்கள். இன்றைய நாட்களில் நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் கொடுமையின் குற்றங்கள் ஒரே ஒரு ஆதாரமூலத்தில் - விசுவாசக்குறைவு, தேவன் மற்றும் அவரது வசனங்களை மறந்துபோகுதல் என்பதில் - கண்டறியப்படக்கூடும். நாம் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மிகப்பரவலாக உயிர்ப்பித்தலைச் செயல்விளைவுபடுத்தாவிட்டால், நமது உலகம் எதிர்கால நியாயத்தீர்ப்பையும் [தேவனுடைய] சீற்றத்தையும் மாத்திரமே எதிர்நோக்கியிருக்கும்.*

*நோவாவின் நாட்களில் இருந்த துன்மார்க்கத்தைத் தேவன் உற்றுநோக் கியபோது, "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" என்று பதிவேடு கூறுகிறது (ஆதியாகமம் 6:6). இதன் விளைவாக, உலகத்தின் அழிவுக்கென்று தேவனுடைய ஆணை செயல்படச் சென்றது! "அப்பொழுது கர்த்தர்: 'நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார்' " (ஆதியாகமம் 6:7).*

*அழிவிற்கான அந்த அறிவிப்பு உடனடியாகவோ அல்லது திடீரென்றோ*

ஏற்பட்டதல்ல. தேவனுடைய நியாயத்தீர்ப்பானது எப்போதுமே, அவரது இரக்கங்களுக்குப் பின்பும், அவரது பரிசுத்த ஆவியின் வேண்டுதல்களைத் தொடர்ந்தும்தான் வருகிறது. "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" (ஆதியாகமம் 6:3) என்ற யெகோவாவினுடைய அறிவிப்பு, தேவன் நீண்டகாலமாக மனிதர்களை நேராக்குவதற்குப் பொறுமையுடன் செயல்பட்டதைக் காண்பிக்கிறது, ஆனால் அது, அவரது நீடிய பொறுமைக்கு எல்லை உண்டு என்பதையும் காண்பிக்கிறது. மனிதனின் பாவம் மற்றும் அவனது சீரழிவு ஆகியவற்றைக் குறித்துத் தேவன் பொறுமையுடன் இருந்திருந்தார். அவர் மனந்திரும்புதலுக்காகக் காத்திருந்தார், ஆனால் மனந்திரும்புதல் வந்திருக்கவில்லை! ஆகையால், வேண்டுதலுக்கான வேளையும் தேவன் தமது நீதியுள்ள நியாயத்தீர்ப்பைக் கொடுக்கப் போவதன் எச்சரிப்புக்கான வேளையும் வந்திருந்தது. மனந்திரும்புவதற்கென்று நமக்குத் தேவன் ஏராளமான வாய்ப்புக்களை இன்னமும் தருகிறார், ஆனால் அந்த வாய்ப்புக்களை நாம் காலந்தோறும் புறக்கணித்தால், பின்பு நாம் கடைசியில் இரக்கத்தினுடைய கதவு மிக இறுக்கமாகத் தடைசெய்யப் படுவதைக் காண வருவோம்!

உலகளாவிய துன்மார்க்கத்தின் மத்தியில், ஒரு மனிதர் தேவபக்தியுள்ள வாழ்வை வாழ்வதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்! உயிருள்ள எல்லாவற்றையும் அழிப்பதற்குத் தேவன் தீர்மானித்தார் என்று நாம் அறிந்த பின்பு, "நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" என்று நாம் வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 6:8). ஒருவேளை நீங்கள், "நோவாவுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைக்காதிருந்தால் என்னவாகியிருக்கும்? நீதியுள்ள நபர் ஒருவர் இல்லாதிருந்தால் என்னவாகியிருக்கும்?" என்று வியப்படையலாம். அப்படியிருந்திருந்தால், தேவன் நிச்சயமாகவே பூமியின் மேல் இருந்த உயிருள்ள எல்லாவற்றையும் அழித்திருப்பார், நாம் அறிந்துள்ளபடியான மனித இனம் இல்லாது ஒழிந்திருக்கும்!

நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது ஏன்? 9ம் வசனம், "... நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்" என்று கூறுகிறது. ஓ, நீதியுள்ள ஒரு வாழ்வின் வல்லமை! நோவா தேவனுடன் சஞ்சரித்துக்கொண்டிருந்த மனிதனாக இருந்தபடியால், அவரும் அவரது குடும்பத்தினரும் காக்கப்பட்டனர். அவர்களின் மூலமாக, மனித இனம் முழுவதும் காக்கப்பட்டது! அதனால்தான் நோவா, "மனித இனத்தைக் காப்பாற்றிய மனிதர்" என்று கருதப்படுகின்றார்.

நோவா தேவனுடைய மனிதராக, விசுவாச விலக்கமான நாட்களில் ஒரு கதாநாயகராக இருந்தார். பீடத்திற்குப்பின் பீடமாக நொறுங்கியிருந்தன, ஆனால் நோவாவுக்குள் இருந்த அக்கினியானது, பெருவெள்ளத்தினால் அணைக்கப்படும் வரையில் அவியாதிருந்தது. தனியாக நிற்பதற்குத் தைரியம் தேவைப்படுகிறது. நோவா, ஒருசிலரே பின்பற்றத் துணிந்த இடத்திற்கு வழிநடத்தத் துணிந்தார்.

சரியான வகையிலான வாழ்வை வாழ்வதற்கு இன்னமும்/ இப்பொழுதும் தைரியம் தேவைப்படுகிறது. ஒருவேளை இப்போதைக்

காட்டிலும் வேறு எந்தக் காலமும் கிறிஸ்தவர்களுக்கு அதிகக் கடினமான தாக இராதிருக்கலாம். தர அளவைகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக இடித்துக் கீழே வீழ்த்தப்பட்டு வருகின்றன. கொள்கைகள் அழிக்கப்பட்டுள்ளன, பலருக்கு எதுவுமே தவறாக இருப்பதில்லை. "இது ஆதாயம் உள்ளதாக இருக்கிறதா?" என்பதே தீர்மானிப்பதில் உள்ள ஒரே பரிசீலனையாக இருப்பதாகக் காணப்படுகிறது. ஒரு தந்தை தமது மகனிடத்தில், "வெளியே சென்று பணம் சம்பாதி. உன்னால் முடியுமென்றால் அதை நேர்மையாகச் சம்பாதி, ஆனால் பணம் சம்பாதி" என்று கூறுகின்றார். பொருளாதாயக் கொள்கையின் பலத்த இறங்குமுக அலையானது, மனிதனை நீதியின் அடிப்படைக் கொள்கைகளில் இருந்து புறம்பே எடுத்துச் செல்கிறது! சரியானது என்பதற்காகச் சரியானவற்றிற்காகவும், சத்தியம் என்பதற்காகச் சத்தியத்திற்காகவும் நிற்கின்றவர்கள், தங்களுக்கு பெரிய அளவில் தைரியமும் உறுதிப்பாடும் தேவை என்பதைக் கண்டறிவார்கள், ஏனெனில் அவர்கள் அடிக்கடி தனியாக நின்றாக வேண்டியிருக்கும்! நோவா, தமது காலத்தில் இருந்த துன்மார்க்கத்திற்கு எதிராக, தேவபக்தியுள்ள வாழ்வு மற்றும் தேவபக்தியுள்ள இல்லம் ஆகியவற்றின் எதிர்ப்பைப் பதிவுசெய்தார்!

## அவர் ஒரு கீழ்ப்படிதல் உள்ள மனிதராக இருந்தார்

நோவா, வரவிருந்த பெருவெள்ளத்தில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும், காத்துக்கொள்ளப்படும்படி விரும்புகின்றவர்களைக் காத்துக்கொள்ளவும் ஒரு பேழையைக் கட்ட வேண்டும் என்று தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டார். தேவன் பின்வருமாறு கூறினார்,

> *மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன். நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; ... (ஆதியாகமம் 6:13, 14).*

நோவாவின் உடனடியான கீழ்ப்படிதலில், நாம் விசுவாசத்தின் மாபெரும் உதாரணங்களாக வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வற்றில் ஒன்றைக் கொண்டுள்ளோம். பல காலங்களுக்குப் பின்பும், அது மறக்கப்பட்டிருப்பதில்லை, ஏனெனில் உலகத்தின் மாபெரும் விசுவாச அறைவீட்டை - எபிரெயர் 11ல் விசுவாச வீரர்கள் பற்றிய விவரத்தை - தமது எழுதுகோலினால் கட்டியெழுப்பிய ஏவுதல் பெற்ற எழுத்தாளர், அதில் நோவாவை உள்ளடக்கினார்:

> *விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து,*

*விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான் (வசனம் 7).*

*நோவாவின் உடனடியான கீழ்ப்படிதலுக்கான இந்த சாட்சியத்தில், நாம் ஆச்சரியம் நிறைந்த பல பாடங்களைக் கண்டறிகின்றோம். முதலாவது, நாம் நோவா தமக்குத் தேவன் கூறியவற்றை ''விசுவாசத்தினாலே'' செய்தார் என்று காணுகின்றோம். தேவன் விவரித்த மாதிரியான ஒரு பெருவெள்ளத்தை நோவா அதற்கு முன் ஒருபோதும் கண்டிருந்ததில்லை. மேலும், தேவன் அவருக்குக் கொடுத்திருந்த பணிப்பொறுப்பானது ஏறக்குறைய மனித முயற்சிக்கு மேலானதாக இருந்தது. இருந்தபோதிலும், நோவா தேவன் கூறியவற்றை விசுவாசித்தார். நோவா கொண்டிருந்த வகையிலான விசுவாசம் இன்றைய உலகின் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. நாம் தரிசித்து அல்ல, ஆனால் விசுவாசித்து நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நான் தேவனையோ, கிறிஸ்துவையோ, பரிசுத்த ஆவியான வரையோ, பரலோகத்தையோ, அல்லது நரகத்தையோ, ஒருபோதும் கண்டிருந்தது இல்லையென்றாலும், அவர்கள்/அவைகள் இருக்கின்றனர்/இருக்கின்றன என்று விசுவாசத்தி னாலே நான் நம்புகின்றேன். நம்மில் எவரும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அத்துடன்கூட வரும் அழிவுடன் சேர்த்து இன்னமும் கண்டிருப்பதில்லை; ஆனால் நோவாவைப் போன்றே நாமும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நோவாவைப் போன்றே நாமும் - "விசுவாசத்தினால்" - அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*எபிரெயர் 11:7, ''விசுவாசத்தினாலே, நோவா ... பேழையை உண்டு பண்ணினான்'' என்று கூறுகிறது. விசுவாசத்தினாலே, நோவா கீழ்ப்படிந்தார். உண்மையில், நோவா தமது கீழ்ப்படிதலினால், தமது விசுவாசத்தைக் காண்பித்தார். நோவா, "பெருவெள்ளம் ஒன்று வருகிறது என்று தேவன் கூறினார், அதை நான் விசுவாசிக்கின்றேன்'' என்று கூறியிருந்து, ஆனால் தேவன் அவருக்குக் கூறியவாறு பேழையை ஆயத்தம் செய்யாது இருந்திருந்தால், நோவா மற்ற ஒவ்வொருவரையும்போலவே வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருப்பார். நண்பர்களே, தேவன் நாம் செய்யும்படி கூறுபவற்றைச் செய்யக் காரணமாகும் விசுவாசம் மாத்திரமே - பவுல் பேசிய வகையிலான விசுவாசம் - தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையிலான விசுவாசமாக உள்ளது, அது "அன்பினால் கிரியை செய்யும் விசுவாசம்" எனப்படுகிறது (கலாத்தியர் 5:6). யாக்கோபு கூறியபடி,*

> *அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். ... ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. ... அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததா யிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததா யிருக்கிறது (யாக்கோபு 2:17-26).*

*அத்துடன் கூடுதலாக, நோவா செய்யும்படி தமக்குத் தேவன் கூறியது எதுவோ அதை மிகச்சரியாகச் செய்தார். அவர் பேழையை மேம்படுத்துவது எவ்வாறு என்று தேவனுக்கு ஆலோசனை எதுவும் கூறவில்லை. அவர் உலகம் காக்கப்படுவதற்கு அதைவிடச் சிறந்த வழியென்று எதையும் முன்மொழியவில்லை. தேவன் மிகச்சிறந்தவற்றை அறிந்துள்ளார் என்று புரிந்துகொண்ட நிலையில், தேவன் கூறியபடியே அவர் [நோவா] செய்தார். வேதவசனங்கள், "நோவா ... செய்தான்" என்று இருமுறை கூறுகின்றன (ஆதியாகமம் 6:22; 7:5). இன்றைய நாட்களில் நமக்கு இந்தப் பாடம் தேவைப்படுகிறது. மனிதர்கள் தேவனுடைய சபைமீது, இரட்சிப்புக்குத் தேவனுடைய திட்டத்தின்மீது, மற்றும் ஆராதனைக்குத் தேவனுடைய மாதிரியின்மீது பல "மேம்பாடுகளை" ஏற்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக, தேவன் கூறியவற்றின்மீது ஆர்வக்குறைவும், அத்துடன் பொதுவான குழப்பமும் பிரிவினையும் ஏற்பட்டுள்ளன. தேவன் பிரியப்படுவதில்லை! நோவா செய்யும்படி தேவன் கூறியவற்றுடன் தமது சொந்தக் கருத்துக்கள் எதையும் கூட்டாமல் செய்ததினால் காப்பாற்றப் பட்டார் - மற்றும் அதுவே நீங்களும் நானும் இரட்சிக்கப்படுவதற்கு வழிமுறையாக உள்ளது.*

## அவர் ஒரு தைரியமான மனிதராக இருந்தார்

*நோவா, பரிகாசம் செய்யப்படுதலில் தமது பங்கைப் பெற்றிருந்தார் என்பதில் நான் நிச்சயமாய் இருக்கின்றேன். நோவா தமது பெரிய பேழையைச் செய்ய உழைத்துக்கொண்டிருக்கையில் மக்கள் அவரை பார்த்துச் சிரித்ததையும் இகழ்ந்ததையும் என்னால் கேட்க முடிகிறது: "கிழவனான நோவாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! மழை பெய்யப் போகிறது என்று அவர் கூறுகின்றார். 'பெருவெள்ளம்' வரப்போகிறது என்றும்கூட அவர் கூறுகின்றார். இப்படிப்பட்ட விஷயங்களை யாராவது எப்போதுதாவது கேள்விப்பட்டிருக்கின்றோமா? இந்தப்பெருவெள்ளம் பூமியை அழிக்கும் என்று அவர் கூறுகின்றார்! தேவன் எப்போதாவது பூமியை அழித்திருக்கின்றாரா? இல்லை!" பின்பு அவர்கள் அனேகமாகத் தங்களுடைய தலைகளை அசைத்துப் புறம்பே நடந்து சென்றிருக்க வேண்டும். மக்களில் சிலர், ஏதேன் தோட்டத்தின் இலைகள் ஒருக்காலும் பனியினால்கூட நனைக்கப்பட்டிருந்தது இல்லை என்று நம்பினர். ஆம், நோவா பரிகாசம் செய்யப்படுதல் மற்றும் கடிந்துகொள்ளப்படுதல் ஆகிய வற்றில் தமது பங்கைப் பெற்றார்.*

*பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, இந்த நம்பிக்கையின்மை மற்றும் பரிகாசம் ஆகியவை பற்றிப் பேதுரு குறிப்பிட்டார். அவர் தேவனுடைய வருகையின் நாள் பற்றி மக்கள் இதைப்போன்றே நடந்து கொள்வார்கள் என்று எழுதினார். ஏளனம் செய்பவர்கள், "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே" என்று கூறுவார்கள் என்பதைப் பேதுரு அறிந்திருந்தார் (2 பேதுரு 3:4). பூமியானது தண்ணீரினால் முன் ஒருக்காலும் அழிக்கப்பட்டு இருந்ததில்லை என்பதால்,*

*பழங்காலத்து மனிதர்கள் ஏளனம் செய்ததைப் போன்றே, பிற்காலங்களில் அவிசுவாசிகளும், உலகம் இதற்குமுன் ஒருக்காலும் நெருப்பினால் அழிக்கப்பட்டதில்லையே என்று கூறுவார்கள். அவர்கள் சிலவற்றை மறந் திருந்தனர் என்று பேதுரு முன்னதாகக் கூறினார்!*

> *பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாம லிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது (2 பேதுரு 3:5-7).*

*கிறிஸ்துவும்கூட, இந்த மாபெரும் நிகழ்ச்சியின் தொடர்பாக மனிதர் களின் அவிசுவாசத்தை, நோவா பேழையைக் கட்டிக்கொண்டிருக்கையில் சிரித்த இம்மனிதர்களின் அவிசுவாசத்திற்கு ஒப்பிட்டார்:*

> *நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷ குமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரள யத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷ குமாரன் வருங்காலத்திலும் நடக்கும் (மத்தேயு 24:37-39).*

*சிரிக்கப்படுவதைச் சகித்துக்கொள்ளக்கூடிய அளவிலான தைரியத்தை நோவா கொண்டிருந்தார். இன்றைய நாட்களில் தேவனு டைய திட்டத்தின்படி வாழவும் தேவனுடைய திட்டத்தின்படி இரட்சிக்கப் படவும் விரும்புகின்ற மக்கள், பரிகாசம் செய்யப்படுவதைச் சகித்துக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இருப்பினும், பின்வருவதைக் கவனியுங்கள்: நோவா பேழையைக் கட்டிக்கொண்டிருந்தபோது, பலர் அவரைப் பார்த்துச் சிரித்தனர், ஆனால் பெருவெள்ளத்தின் தண்ணீர் சுழன்று வந்து பூமியானது தோற்றகாலத்தில் இருந்தது போன்றே தண்ணீரால் குழப்பமுற்றபோது, அவரைப் பார்த்து ஒருவரும் சிரிக்கவில்லை! நேரடி அர்த்தத்தில், "மரணத்திற்கென்று தனக்குத்தானே சிரிக்கின்ற" ஏளனம் செய்யும் உலகத்திற்கு இது எவ்வளவு பெரிய எச்சரிக்கையாக உள்ளது! சிந்தனையைத் தூண்டும் பின்வருகிற சத்தியத்தைப் பேதுரு முன்வைத்தார்:*

> *தேவன் ... பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித் தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; ... கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனை*

*யினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் (2 பேதுரு 2:4-9).*

## அவர் ஒரு பரிவிரக்கமுள்ள மனிதராக இருந்தார்

மக்கள் இழந்துபோகப்பட வேண்டும் என்று தேவன் விரும்பியதில்லை. அவர்கள் அவரிடம் திரும்பியிருந்தார்களென்றால், அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடிந்திருக்கும். நோவாவின் மூலமாகத் தேவன் செயல்பட்டதென்பது, அவர் [தேவன்] மக்களைத் தம்மிடம் திருப்பிக் கொண்டு வருவதற்கான ஒரு வழிமுறையாக இருந்தது. 2 பேதுரு 2:5ம் வசனத்தின்படி, நோவா "நீதியைப் பிரசங்கித்தவராக" இருந்தார்.

நோவா, குறைந்தபட்சமாக இரு வழிமுறைகளில் பிரசங்கித்திருக்க வேண்டும்: தமது வாழ்வினாலும் தமது செயல்பாடுகளினாலும்! நோவா பேழையைக் கட்டிக்கொண்டிருக்கையில், அவர் தச்சுவேலை செய்பவர் என்பதைக்காட்டிலும் அதிகமான சிலவற்றைச் செய்தார். அவரது பேழையின் தளமானது அவரது பிரசங்கமேடையாயிற்று, அவரது சுத்தியலின் ஒலியானது அவரது குரலாயிற்று. அவர் நாளுக்குப்பின் நாளாக, வாரத்திற்குப்பின் வாரமாக, மாதத்திற்குப்பின் மாதமாக, ஆண்டுக்குப்பின் ஆண்டாக வேலைசெய்தார். கோடாரியின் ஒவ்வொரு வெட்டும், சுத்தியலின் ஒவ்வொரு அடியும், இரம்பத்தின் ஒவ்வொரு அறுப்பும், அவர் தமது சகமனிதர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட ஒரு பாடமாக இருந்தது; ஏனெனில் அந்த முயற்சி ஒவ்வொன்றும், அவர் தேவனில் விசுவாசமாக இருந்ததை, தேவனுடைய வல்லமையில் விசுவாசமாக இருந்ததை, மற்றும் அவரிடத்தில் தேவன் பேழையைக் கட்டும்படி கூறியபோது, தேவன் தாம் கூறியதை அர்த்தப்படுத்தினார் என்பதில் விசுவாசமாக இருந்ததைத் தனிச்சிறப்புடன் உணர்த்திற்று. மற்றவர்களுடைய ஆத்துமாக்களின்மீது ஆர்வம் கொண்டவராகவும், தான் மாத்திரம் இரட்சிக்கப்படுவதை விரும்பாதவராகவும் இருந்த நோவா, மனந்திரும்புதலுக்கு வருமாறு மனிதர்களைத் திரும்பத் திரும்ப அழைத்திருக்க வேண்டும்.

நமக்கு இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட "நீதியைப் பிரசங்கிப்பவர்கள்" தேவை! தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்பவர்களில் பலர், நீதியைப் பிரசங்கிப்பவர்களாக இருக்கும் விஷயத்தில், தங்கள் ஆத்துமாக்கள்மீதே போதிய அளவுக்கு அக்கறையற்றவர்களாகவும், மற்றவர்களின் ஆத்துமாக்கள்மீது மிகக்குறைவான அக்கறையுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களின் வாழ்விலோ அல்லது வார்த்தைகளிலோ தேவன் காணப்படுவதில்லை. மற்றவர்களின் ஆத்துமாக்கள் மீது செயல்துடிப்புள்ள அக்கறையென்பது ஒருக்காலும் பெரியதாக இருந்ததில்லை, ஆனால் மாறுபாட்டின் அலை ஒன்று சபையைத் தாக்கியுள்ளதாகக் காணப்படுகிறது. இருதயமற்ற சபை என்பது நம்பிக்கையற்ற உலகத்திற்குச் சமமானதாக உள்ளது! நாம் மற்றவர்களின் ஆத்துமாக்கள்மீது உண்மையான அக்கறை உடையவர்களாக இருந்தால்,

நோவாவைப் போன்றே "நீதியைப் பிரசங்கிப்பவர்"களாக இருப்போம்.

நோவா தமது பிரசங்கித்தலினால், "உலகம் ஆக்கினைக்குள்ளான தென்று தீர்த்தார்" என்பதாக எபிரெயர் 11:7ம் வசனம் கூறுகிறது. அது எவ்வாறு நடந்தது? உலகம் அதைப் புறக்கணித்தது! நீங்கள் எப்போதாவது, உலகத்தை இரட்சிக்கும் அதே சுவிசேஷம் உலகத்தை நியாயம்தீர்க்கவும் செய்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க நின்றதுண்டா? கிறிஸ்து பின்வரு மாறு கூறினார்,

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனு டைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விவாசமுள்ளவனா யிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று (யோவான் 3:16-18).

தேவன் ஒரு கட்டளையைக் கொடுக்கும்போதெல்லாம், இருமடங்கு வாக்குத்தத்தம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது - கீழ்ப்படிதலுக்கு ஆசீர் வாதத்தின் வாக்குத்தத்தமும், கீழ்ப்படியாமைக்கு ஆக்கினைத்தீர்ப்பின் வாக்குத்தத்தமும். இன்றைய நாட்களில் நாம் சத்தியத்தைப் பிரசங்கிக்கும்போது, கீழ்ப்படியாதவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகின்றனர் மற்றும் கீழ்ப்படிபவர்கள் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். நீங்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறும்படி ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் வேண்டுகோள் விடுப்பதை நீங்கள் கேட்கும்போது, அதை முழுவதுமோ அல்லது ஒரு பகுதியையோ நீங்கள் புறக்கணித்தால், உண்மையில் நீங்கள் உங்களையே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக்கொள்கின்றீர்கள்! இந்தக் கருத்தமைவில்தான் நோவா உலகத்தை ஆக்கினைக்குள்ளாக நியாயந்தீர்த்தார், ஏனென்றால் அவரது உபதேசத்தை அவர்கள் புறக்கணித்தனர்.

ஒரு கருத்தமைவில், நோவா மிகவும் வெற்றிகரமான பிரசங்கியாராக இருக்கவில்லை. அவர் தம்மை தவிர ஏழுபேர்களை - மொத்தத்தில் எட்டுப்பேர்களை - மாத்திரமே காத்துக்கொள்ள முடிந்தது! எட்டு பேர்கள் மாத்திரமே ஜலத்தினால் காக்கப்பட்டனர் (1 பேதுரு 3:20). எட்டு என்பது ஒரு சிறுகுழுவாக உள்ளது. மனித இனம் முழுமையிலும் இருந்து எட்டுப்பேர் மாத்திரம் என்பதை நினைத்துப் பாருங்கள். இருப்பினும், தேவனுடைய கிருபையினால், உலகத்தில் மக்கள்தொகையைப் பெருக்கவும் புதிதாகத் தொடங்கவும் இந்த எட்டுப்பேர் போதுமான வர்களாக இருந்தனர். உண்மைநிறைந்த பிரசங்கம் எப்போதுமே தனது விளைவுகளைக் கொண்டுள்ளது; ஒருசிலர் மாத்திரமே இரட்சிக்கப்

பட்டனர் என்பது தேவனுடைய தர அளவையில் வெற்றியாக உள்ளது.

## அவர் ஒரு நன்றி நிறைந்த மனிதராக இருந்தார்

கடைசியாக வேளை வந்தது. கப்பல் கட்டும் திட்டம் முடிந்தபோது, நோவா அந்தப் பேழையின் கதவு வழியாகத் தமது குடும்பத்துடன் உள்ளே சென்றார், மற்றும் "கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்" (ஆதியாகமம் 7:16).

தேவன் தமது நீடிய பொறுமையில் காத்திருந்தார். மனந்திரும்புதல் வந்திருக்கவில்லை. நீதியுள்ள நியாயத்தீர்ப்புக்குரிய காலம் வந்திருந்தது! நாம், "... மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேலும் பெருமழை பெய்தது" என்று வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 7:11, 12).

தண்ணீரின் பெருவெள்ளத்தின்மூலம் மனிதக்குடும்பம் எடுத்துக் கொள்ளப்பட்ட பேரழிவு ஒன்று நடந்தது என்று உலகத்தின் பெரும்பான் மையான மனித இனங்கள் பாரம்பரிய நம்பிக்கை கொண்டுள்ளன. தேவன் திரளான தண்ணீர்கள் என்பதைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்த, அதிக பயங்கரமான, அதிக திகைப்புக்குரிய கருவி எதையும் கொண்டிருப்ப தில்லை. இந்த மாபெரும் அண்டப்பேரழிவைக் காட்சிப்படுத்த ஒருவர், 1888ல் பென்சில்வேனியாவின் பிட்ஸ்பர்க் அருகில் ஜான்ஸ்டவுன் என்ற இடத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தை நினைத்துப் பார்க்கலாம், அதில் சுழன்றோடும், சீறிப்பாயும் பெருவெள்ளத் தண்ணீருக்குள்ளாகப் பத்தாயிரம் நபர்கள் அழிந்தனர். அந்த அண்டப்பேரழிவைக் காட்டிலும், நோவாவின் நாட்களில் ஏற்பட்ட பெருவெள்ளம் மிகவும் மேன்மை யானதாக இருந்தது. இந்த நிகழ்ச்சி பற்றிய வரைகலைஞர்களின் சித்தரிப்புகள், அழிந்துபோன மனிதர்கள் மற்றும் மிருகங்களின் ஏக்கப் பெருமூச்சுகளையும் துக்கக் குரல்களையும் காண்பிக்கின்றன. கவிஞர் களாலும் பேச்சாளர்களாலும் நாடாகத்துவமான வார்த்தைகள் எழுதப் பட்டுள்ளன, ஆனால் இந்தப் பெருவெள்ளமானது, வார்த்தைகளால் விவரிக்கக்கூடாத அளவுக்கு மிகவும் பெரியதாக, மிகவும் பரந்ததாக, மிகவும் கோரமானதாக இருந்தது. இதை நாம் வேதாகமம் விட்ட இடத்தி லேயே விட்டுவிடுகின்றோம்:

> ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால், வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன. மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்துமுழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று. அப்பொழுது மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன. வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின (ஆதியாகமம் 7:19-22).

மரணம்! மரணம்! மரணம்! பெருவெள்ளம் உலகளாவிய மரணத்தை

விளைவித்தது. நோவாவும் அவரது குடும்பத்தாரும் மாத்திரமே உயிருடன் இருந்தனர். ஏன்? ஏனென்றால் நோவா செய்யும்படி தேவன் கூறியதை அவர் [நோவா] செய்திருந்தார்.

கடைசியில் பெருவெள்ளம் முடிவுக்கு வந்தது. நோவா, உலகத்தின் நிலையை அறிந்துகொள்ளும் பேரார்வம் உள்ளவராக, ஒரு காகத்தை வெளியே அனுப்பினார். மாம்ச உணவை உட்கொள்ளும் இந்த அசுத்தமான பறவையானது, திரும்பிவரவில்லை. அடுத்ததாக, நோவா ஒரு புறாவை வெளியே அனுப்பினார், "பூமியின்மீதெங்கும் ஜலம் இருந்தபடியால், அந்தப் புறா தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல், திரும்பிப் பேழையிலே அவனிடத்தில் வந்தது; …" (ஆதியாகமம் 8:9). நோவா இரண்டாம்முறை புறாவை வெளியே அனுப்பியபோது, அது தனது வாயில் ஒரு ஒலிவமரத்தின் இலையுடன் திரும்பி வந்தது. இது பெருவெள்ளம் ஓய்ந்தது என்றும் தண்ணீர் வற்றிக்கொண்டிருந்தது என்றும் நோவாவை அறியச் செய்தது. இதில் நோவா தளராத முயற்சிக்கும், நீடியபொறுமைக்கும் உதாரணமாக உள்ளார். முதல்முறை புறா திரும்பி வந்தவுடன் அவர் தமது முயற்சியை விட்டுவிடவில்லை. அதற்குப்பதிலாக, அவர் தமக்குத் தேவைப்பட்ட பதிலைத் தேவன் கொடுக்கும் வரைக்கும், சிறகுள்ள இந்த ஒற்றாளைத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருந்தார். நம்மில் பலர் மிகச்சுலபமாக ஊக்கம் இழந்துபோகின்றோம். கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதில், நாம் வேதாகமத்தைப் படித்தல் மற்றும் புரிந்துகொள்ளுதல், அல்லது தனிநபர் ஊழியம் செய்தல் என்பவை போன்ற ஒரு சில முயற்சிகளை மேற் கொள்ளுகின்றோம். பின்பு நாம் அப்படியே விட்டுவிடுகின்றோம். நாம் விடாமுயற்சியுடன் இருந்த நோவாவைப் போல் இருப்பது அவசியமாகும்!

பெருவெள்ளத்தின் தண்ணீர்கள் வற்றியபோது, உலகத்திற்குப் புதிய தொடக்கம் தரப்பட்டது. நோவா செய்த பின்வரும் செயலைக் காட்டிலும் புதிய தொடக்கத்தை ஏற்படுத்த வேறு மிகச்சிறந்த வழி எதையும் நான் நினைத்துப் பார்க்க முடியவில்லை: "அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, … பலிபீடத்தின்மேல் தகனப்பலியாகப் பலியிட்டான்" (ஆதியாகமம் 8:20). தேவன் இந்த பலியை ஏற்றுக்கொண்டு, மனிதக் குடும்பம், இவ்வகையான உலகளாவிய பேரழிவு இனி ஒருபோதும் நடைபெறாது என்ற நம்பிக்கையில் விதைத்தல் மற்றும் அறுத்தல் என்ற பணிகளைச் செய்யலாம் என்று ஆச்சரியமான வாக்குத்தத்தம் கொடுத்தார். நோவாவிடத்தில் தேவன்/தேவன் தம்முடைய உள்ளத்தில், "பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை" என்று கூறினார் (ஆதி யாகமம் 8:22).

வானவில் என்பது, தேவன் நோவாவுடன் ஏற்படுத்திய உடன்படிக் கையின் அடையாளமாக இருந்தது. வானவில் என்பது இயற்கையின் மிகுந்த அழகிய காட்சிகளில் ஒன்று என்பது நிச்சயம். ஆகாயத்தையும் பூமியையும் இணைப்பதுபோல் வானத்தின் குறுக்கே ஏற்பட்ட வானவில் லை யாவரும் திகைப்புடன் நின்று பார்த்திருப்பார்கள் என்று நான் உறுதி

*யாகக் கூறுகின்றேன். இருப்பினும், பின்வருவதை உங்களுக்கு நினைவூட்ட நான் விரும்புகின்றேன்: பெருவெள்ளத்திற்குப் பின்பு வானவில் வந்தது, இன்னமும் புயல் மேகங்களுக்குப் பின்பு வானவில்கள் வருகின்றன. வானவில்கள் மேகமற்ற, மழையில்லாத நாட்களில் காணப்படுவதில்லை. அதுபோன்றே, தேவனுடைய இரக்கத்தின் வானவில்கள், எதிர்ப்பு, வருத்தம், மற்றும் சோதனை ஆகியவற்றின் நாட்களில் மிகத்தெளிவாகக் காணப்படுகின்றன!*

## *முடிவுரை*

*எனவே, இங்கு, "மனித இனத்தைக் காப்பாற்றிய மனிதரின்" வரலாறு உள்ளது. நோவாவினுடைய வாழ்வின் கடைசிக் காட்சியில் நாம் இரக்கத்தின் மூடாக்கு ஒன்றைப் போடுவோம், அது ஒருகணநேர பலவீனமாக இருந்தது (ஆதியாகமம் 9:20-23). நாம், "நோவாவின் பலவீனங்களில் அல்ல, ஆனால் அவரது பலங்களில், நாம் அவரைப் போல் இருப்போமாக" என்று மாத்திரம் கூறுவோம்.*

*நாம் நோவாவிடத்தில் இருந்து பல பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்; ஆனால் குறிப்பாக, அவர் செய்யும்படி தேவன் கூறியவற்றிற்கு அவர் கீழ்ப்படிந்ததால், அவர் தேவனால் காக்கப்பட்டார் என்ற பாடத்தை நாம் கற்றுக்கொள்வோமாக. இன்றைய நாட்களில் நமது இரட்சிப்பு, 1 பேதுரு 3:20, 21ல் நோவா காக்கப்பட்ட நிகழ்ச்சியுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது:*

> *… அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப்பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப் பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.*

*நோவா பேழையில் இருந்து, ஒரு புதிய, பொலிவுள்ள, தூய்மையான, மற்றும் சுத்தமான உலகத்திற்குள் அடியெடுத்து வைத்தார். அதுபோலவே, நீங்களும் நானும் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பி, அவருடைய நாமத்தை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானத்தில் புதைக்கப்படும்போது, நாம் தேவனுடைய கரத்தினுல் சுத்தமாக்கப்பட்ட ஒரு புதிய வாழ்விற்குள் வருகின்றோம்!*

*இன்னும் ஒரு சத்தியத்தை நாம் நினைவுகூருவோமாக: ஆயத்தத்தை மேற்கொண்டிராதவர்களே அழிக்கப்பட்டனர். தண்ணீர் சுழன்று வந்த போது, அப்பொழுது அவர்கள் ஆயத்தப்பட விரும்பி இருப்பார்கள் என்று நான் உறுதியாகக் கூறுவேன் - ஆனால் அதன்பின்பு பேழை மூடப்பட்டது. அதுபோலவே, இன்றைய நாட்களில் பலர் சுவிசேஷத்திற்குத் தாங்கள்*

கீழ்ப்படிவதைத் தாமதித்துக்கொண்டிருக்கின்றனர். ஒரு நாளில், அது மிகவும் தாமதமாகிவிடும்! பேதுரு பின்வருமாறு கூறினார்,

> *தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் (2 பேதுரு 3:9, 10).*

தாமதிக்காதீர்கள். ஏளனம் செய்யாதீர்கள். உங்களையே கர்த்தருக்கு எளிமையான கீழ்ப்படிதலில் ஒப்புக்கொடுங்கள்.

**கற்க வேண்டிய பாடம்:**
**உங்களைச் சுற்றிலும் இருப்பவர்கள் எவ்வாறு வாழ்ந்தாலும் நீங்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருங்கள்.**

---

குறிப்பு

[1]The title and much of the material in this lesson are fron Clarence Macartney, *Sermons on Old Testament Heroes* (New York: Abingdon Press, 1935), 9-20.

# சாலொமோன்

# ஞானமிக்க மற்றும் மிகவும் மதியீனமான மனிதர்

**எடி குளோர்**

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 3:3-11:43*

*ஆக்லஹாமாவின், டாஹ்லேக்வா என்ற இடத்தில், 1961ல், நான் "தப்பித்தலின் நுட்பங்கள்" என்ற கருத்தைப் பற்றி ஒரு மனோதத்துவ நிபுணர் பேசக் கேட்டேன். அதிகமான ஏக்கத்தில் இருந்து கணநேரத் திற்கு நம்மை மூடிக்கொள்வதற்காக நாம் யாவருமே இந்த நுட்பங்களை ஒரளவிற்குப் பயன்படுத்துகின்றோம். அந்தப் பேச்சாளர், பகுத்தறிதல், அடங்கிப்போகுதல், அடக்குதல், எதிர்த்திசையில் அதிகமாகப் பதில்செயல் செய்தல், மறுத்தல், மற்றும் இவைபோன்ற சில நுட்பங்களைப் பட்டியலிட்டார். இவற்றில் ஒன்று குறிப்பாக, சாலொமோனின் சிந்தித்தலை விவரிப்பதாகக் காணப்படுகிறது. தப்பித்தலின் இந்த செயல்முறையை, அந்த மனோதத்துவ நிபுணர், "பகுதிகளாகப் பிரிக்கும் தர்க்கவியல் வகை" என்று அழைத்தார். மக்கள் சிலவேளைகளில் தங்கள் சிந்தைகளில் இரு பகுதிகளைக் கொண்டிருப்பது போலவும், அவை ஒவ்வொன்றும் சாத்தி யமான வகையில், ஒன்றிற்கு நேரெதிரான வகையில் இன்னொன்று தனது சொந்த மதிப்பீடுகளின் அமைவுகளைக் கொண்டிருப்பது போலவும் நடந்துகொள்கின்றனர் என்று அந்தப் பேச்சாளர் கூறினார். சிலர், ம றுபட்ட இரு மனநிலைகளில் வாழ விரும்புவதால், அவர்களுக்கு இது அவசிய மாகிறது. ஒரு விவரிப்பு என்ற வகையில் அவர் ஜனநாயகம், சமஉரிமை ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், ஆனால் அதேவேளையில் தனிப்படுத்துதலையும் தாம் நம்புவதாகவும் கூறுகின்ற ஒரு மனிதரைச் சுட்டிக்காண்பித்தார். மதமும் வியாபாரமும் ஒன்றுகலக்கக் கூடாது என்று நம்புகின்ற வகைப்பட்ட மனிதர் இன்னொரு உதாரணமாக இருக்கின்றார். அவர் ஞாயிற்றுக்கிழமைகளில் தமது மத உறுதிப்பாடுகளில் (அவரைப் பொறுத்தமட்டில்) நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கின்றார், ஆனால் வாரநாட்களின்போது அவர் தமது வியாபார நடவடிக்கைகளில் முறையற்ற வகையில் பொருள் சேர்ப்பவராக இருக்கின்றார். அப்படிப் பட்ட நபர் தமது செயல்பாடுகள் மற்றும் எண்ணப்போக்குகளில் உள்ள சீரற்றதன்மை பற்றி அறியாமல் இருக்கின்றார் என்பது நினைவில் வைக்க வேண்டிய ஒரு முக்கியமான உண்மையாகும் என்று அந்த மனோத்தத்துவ*

நிபுணர் கூறினார். சாலொமோன் இதேவகையிலான பிரச்சனையைக் கொண்டிருந்தார் என்பது உறுதி.

சாலொமோன், வேதாகமத்திலேயே ஞானமிக்க மற்றும் மிகவும் மதியீனமான மனிதராகக் கண்ணோக்கப்பட முடியும். சாலொமோனின் சிந்தையில் இரண்டு தனித்தனியான மற்றும் வெவ்வேறு வகையான பிரிவறைகள் இருந்தனபோன்று காணப்படுகிறது: அவற்றில் ஒன்று மிகவும் ஞானமுள்ளதாகவும் தமது குடிமக்களுக்கு அறிவுரை கொடுப்பதற்கென்றே வைக்கப்பட்டிருந்ததாகவும் காணப்படுகிறது; இன்னொன்று மிகவும் மதியீனமானதாகவும் தனக்கென்று முடிவுகளை ஏற்படுத்தப் பயன்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகிறது.

சாலொமோனுடைய வாழ்வு, அத்தியாவசியமான வகையில், நேரெதிரான கருத்துக்கள் ஒன்றின் வாழ்வாக இருந்தது. அவர் ஒரு மகிமை யான தொடக்கம் கொண்டிருந்தார். பாவத்தின் காரணமாக அவருக்கு முன்பு ஒரு மகனை இழந்திருந்த அவரது பெற்றோர்களான, தாவீதும் பத்சேபாளும், அவரது பிறப்பை மாபெரும் நன்றிசெலுத்துதலுடன் உரிமை கோரியிருந்தனர். அவருக்குத் தாவீது, “சாலொமோன்,” அல்லது “சமா தானம் நிறைந்தவர்,” என்று பெயரிட்டு, அவர் ஒரு சமாதானமான ஆட்சி நடத்தவேண்டும் என்ற தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார். தேவன் அவருக்கு “தேவனுடைய அன்பன்” என்று அர்த்தப்படும் மிக உயர்வான, “யெதிதியா,” என்ற பெயரைக் கொடுத்தார். அவர் நேரடி அர்த்தத்தில் “மக்களுக்காகப் பிறந்தார்” மற்றும் அவர் பதினெட்டுக்கும் குறைவான வயதுடையவராக இருந்தபோது, தமது தந்தையின் மரணத்தினால், அரியணை ஏறினார். அவர் [நமது] சிந்தனை கற்பனை செய்யக்கூடிய வகையில், மிகத் தூய்மையான மற்றும் மிகவும் நம்பிக்கையூட்டக்கூடிய இளைஞர்களில் ஒருவராக இருந்தார். இருப்பினும், நாற்பது ஆண்டுகளை மாத்திரம் நாம் முன்னோக்கிக் காணும்போது, அவரை - இன்னமும் அறுபது வயத்திற்கும் குறைவானவராக - உடலில் சிதறிப்போனவராக மற்றும் ஏறக்குறைய வீழ்ச்சியடைய இருந்த பேரரசினால் இடர்ப்பாடு அடைந்தவராகக் காணுகின்றோம். சாலொமோனின் வாழ்வில் இருந்து நமக்குப் பாடங்களைக் கண்டறிய முடியும்.

## ஞானமிக்க மனிதர்

நாம், 1 இராஜாக்கள் புத்தகத்தின் தொடக்க அதிகாரங்களை வாசிக்கும்போது, சாலொமோனின் ஞானத்திற்குப் பல ஆதாரங்களைக் காணுகின்றோம்:

முதலாவது, சாலொமோன் தமது தொடக்ககாலத் தேர்ந்துகொள்ளுதல் களில் ஞானமுள்ளவராக இருந்தார். அரசர் என்ற வகையில் அவர் ஆசரிப்புக்கூடாரம் இருந்த கிபியோன் என்ற உயரமான மேட்டைப் பார்வையிடச் சென்றது, அவரது தொடக்ககால நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது. அங்கே அவர் மோசேயின் பீடத்தின்மீது ஆயிரம் தகனபலியைச் செலுத்தினார். அவர் அங்கே இருக்கையில், இரவுவேளையில் கனவு ஒன்றில் அவருக்குத் தேவன் தரிசனமானார். அவர், “நீ விரும்புகிறதை

*என்னிடத்தில் கேள்" என்று கூறினார் (1 இராஜாக்கள் 3:5).*

*உங்களுக்கு இப்படிப்பட்ட தேர்ந்துகொள்ளுதல் கொடுக்கப்பட்டால், நீங்கள் எதைத் தேர்ந்துகொள்வீர்கள்? நீடிய ஆயுளையா? செல்வங்களையா? கனத்தையா? சாலொமோன் ஞானத்தைத் தேர்ந்துகொண்டார்:*

> *அதற்குச் சாலொமோன்: "... என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மனநேர்மையு மாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே, அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர். இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்குவரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமா யிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்?" (1 இராஜாக்கள் 3:6-9).*

*இளைஞர்களே, கவனியுங்கள்: உங்கள் இலக்குகளும் நோக்கங்களும், நீங்கள் இந்த வாழ்வில் எப்படி இருக்கின்றீர்கள் மற்றும் என்னவாகின்றீர்கள் என்பதைக் கொண்டு பெருமளவில் தீர்மானிக்கப்படுகிறது. பொருள் உடைமைகளுக்கு மாறாக, உண்மையிலேயே முக்கியமானது எது என்பதை - கிறிஸ்தவப் பண்பு, நேர்மை, மற்றும் நற்பெயர் ஆகியவற்றை - பெற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள். சாலொமோன் ஞானத்தின் ஆசீர்வாதத்தைத் தேர்ந்துகொண்டதால், அவர் மற்ற பல ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டார்:*

> *சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது. ஆகையினால் தேவன் அவனை நோக்கி: "நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்தக் காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிற தற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால், உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருத யத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்கு முன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்பு வதுமில்லை. இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமை யையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை. உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல, நீயும் என் கட்டளைகளையும் என் நியாயங்*

*களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப்பண்ணுவேன் என்றார்" (1 இராஜாக்கள் 3:10-14).*

*பல ஆண்டுகளுக்கு முன்பு விக்டோரியா இளவரசி இங்கிலாந்தின் அரசியானபோது, மெல்பர்ன் பிரபு வேதாகமத்தைத் திறந்து சாலொமோனுடைய தீர்மானம் பற்றிய வரலாற்றை இளம் அரசிக்கு வாசித்தார். பொது அலுவலர்கூட சாலொமோனுடைய கனவுபோன்றதைக் கொண்டிருந்து அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதென்பது மிகச்சிறந்ததாக இருக்கும் அல்லவா!*

*இரண்டாவது, சாலொமோன் மற்றவர்களைக் கையாள்வதில் ஞானமுள்ளவராக இருந்தார். ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய வரலாறு, அவரது ஞானம் பற்றிய பல விவரிப்புகளைக் கையளித்துள்ளது. அவற்றில் ஒரு வரலாறு பின்வருமாறு: சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைக் காணவந்தபோது, அவள் இரண்டு மலர்க்கொத்துக்களைக் கொண்டு வந்தாள். அவற்றில் ஒன்று உண்மையானது; இன்னொன்று அவள் அந்த சந்தர்ப்பத்திற்காக ஒரு தொழில்வல்லுநரிடத்தில் கட்டளையிட்டுச் செய்வித்த செயற்கையான மலர்க்கொத்தாக இருந்தது. செயற்கையான மலர்க்கொத்து இயற்கையான மலர்க்கொத்தில் இருந்து பிரித்து அறிய முடியாததாக அவ்வளவு நேர்த்தியாக, உயிர்த்துவமாகச் செய்யப்பட்டிருந்தது. சாலொமோனுடைய பெயர்பெற்ற ஞானத்தைச் சோதிப்பதற்காக, அவள் அவரிடத்தில் உண்மையான மலர்க்கொத்தைக் கண்டுபிடித்து தேர்ந்துகொள்ளுமாறு அறைகூவல் விடுத்தாள். அரசர் சற்றுநேரம் அந்த விஷயத்தில் குழம்பியிருந்து, பின்பு ஒரு தேனீக்கூட்டம் பறந்துகொண்டிருந்ததை அரண்மனையின் ஜன்னல் வழியாகக் கண்ணோக்கினார். அவர் ஒரு வேலைக்காரனிடத்தில், ''ஜன்னலைத் திற,'' என்று கட்டளையிட்டார். தேனீக்கள் உள்ளே வந்து உயிருள்ள மலர்களைச் சுற்றிவந்து ரீங்காரமிட்டன, இது சாலொமோனுடைய கூர்மையான அறிவைச் செயல் விளக்கப்படுத்துகிறது. இந்தக் கதையின்படி, சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தினால் மனம் ஈர்க்கப்பட்டாள் (1 இராஜாக்கள் 10:7ஐக் காணவும்).*

*வேதவசனங்கள், சாலொமோனின் ஞானத்திற்கு ஒரே ஒரு விவரிப்பை நமக்குத் தருகின்றன, இது அவர் கண்ட கனவிற்குச் சற்றுப்பின்பு நடந்ததாகும்:*

*அப்பொழுது வேசிகளான இரண்டு ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் வந்து, அவனுக்கு முன்பாக நின்றார்கள். அவர்களில் ஒருத்தி: "என் ஆண்டவனே, நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம்; நான் இவளோடே வீட்டிலிருக்கையில் ஆண்பிள்ளை பெற்றேன். நான் பிள்ளைபெற்ற மூன்றாம் நாளிலே, இந்த ஸ்திரீயும் ஆண்பிள்ளை பெற்றாள்; நாங்கள் ஒருமித்திருந்தோம், எங்கள் இருவரையும் தவிர, வீட்டுக்குள்ளே வேறொருவரும் இல்லை. இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மேல்*

*புரண்டுபடுத்ததினால் அது செத்துப்போயிற்று. அப்பொழுது, உமது அடியாள் நித்திரைபண்ணுகையில், இவள் நடு ஜாமத்தில் எழுந்து, என் பக்கத்திலே கிடக்கிற என் பிள்ளையை எடுத்து, தன் மார்பிலே கிடத்திக்கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து, என் மார்பிலே கிடத்திவிட்டாள். என் பிள்ளைக்குப் பால்கொடுக்கக் காலமே நான் எழுந்திருந்தபோது, அது செத்துக்கிடந்தது; பொழுது விடிந்தபின் நான் அதை உற்றுப்பார்க்கும்போது, அது நான் பெற்ற பிள்ளை அல்லவென்று கண்டேன் என்றாள்." அதற்கு மற்ற ஸ்திரீ: "அப்படியல்ல, உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்றாள்." இவளோ: "இல்லை, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை" என்றாள்; இப்படி ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள் (1 இராஜாக்கள் 3:16-22).*

*இன்றைய நாட்களில் உள்ள நியாயாதிபதி ஒருவர் இந்த வழக்கை, சாட்சியத்தின் குறைபாட்டினால் தள்ளுபடி செய்துவிடுவார், ஆனால் சாலொமோனுடைய உள்ளார்ந்த அறிவுநோக்கு திகைப்புக்குரியதாக உள்ளது:*

*அப்பொழுது ராஜா: "ஒரு பட்டயத்தைக் கொண்டுவாருங்கள்" என்றான்; அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடத்தில் கொண்டு வந்தார்கள். ராஜா, "உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள்" என்றான். அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: "ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்ல வேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும்" என்றாள்; மற்றவள் "அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள்" என்றாள். அப்பொழுது ராஜா "உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதின் தாய் என்றான்" (1 இராஜாக்கள் 3:24-27).*

*இந்த முடிவின் விளைவாக, நாம் "ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்குத் தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்" என்று வாசிக்கின்றோம் (1 இராஜாக்கள் 3:28).*

*மூன்றாவது, சாலொமோன் மற்றவர்களுக்குக் கல்வி புகட்டுவதில் ஞானமுள்ளவராக இருந்தார். அவர் "ஞான இலக்கியம்" என்று நாம் அழைக்கும் புத்தகத்தின் தகப்பனாக இருந்தார். நமக்குப் பின்வருமாறும் கூறப்பட்டுள்ளது,*

*தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார். சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம்*

சிறந்ததாயிருந்தது. ... சுற்றிலும் இருந்த சகல ஜாதிகளிலும் அவன் கீர்த்தி பிரபலமாயிருந்தது (1 இராஜாக்கள் 4:29-31).

சாலொமோன் “மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான், அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து” என்று வேதவசனங்கள் நமக்குக் கூறுகின்றன (1 இராஜாக்கள் 4:32). மூவாயிரம் நீதிமொழிகளில், மூன்றில் ஒரு பகுதி மாத்திரமே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன, ஆனால் நம்மில் பலர், பின்வரும் கருத்துக்கள் பொதுவான சொல்விளக்கங்களில் மேற்கோள் காண்பிக்கப்படுவதைக் கேட்டிருக்கின்றோம்:

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6).

பிள்ளையைத்தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான் (நீதிமொழிகள் 23:13).

திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம் (நீதிமொழிகள் 22:1).

முற்கோபி மதிகேட்டைச் செய்வான்; ... (நீதிமொழிகள் 14:17).

சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள் (நீதிமொழிகள் 6:6).

சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு (நீதிமொழிகள் 18:24).

சாலொமோனின் 1,005 பாடல்கள் நன்கு அறியப்பட்டிருப்பதில்லை, ஆனால் சங்கீதம் 127 ஒரு உதாரணமாக உள்ளது. அதில் வசனங்கள் 1-3ஐக் கவனியுங்கள்:

... கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையில் தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா; அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.

மொத்தத்தில், சாலொமோன் பழைய ஏற்பாட்டில் மூன்று புத்தகங்களை எழுதினார்: அவரது சங்கீதங்களுடன் கூடுதலாக, அவர் நீதிமொழிகள், பிரசங்கி, மற்றும் உன்னதப்பாட்டு என்ற புத்தகங்களை எழுதினார். மேலும் அவர் வனவியல் மற்றும் மிருகங்களின் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றியும் எழுதினார் (1 இராஜாக்கள் 4:33, 34).

நான்காவது, அவர் தேவனை மகிமைப்படுத்தும் தமது செயலில்

ஞானமுள்ளவராக இருந்தார். சாலொமோன் தேவனுடைய நாமம் பாதுகாக்கப்படுவதற்கென்று மாபெரும் தேவாலயம் கட்டிய செயலில் எப்போதும் அறியப்பட்டவராக இருப்பார். அது அவரது தந்தையான, தாவீதின் கனவாக இருந்தது; ஆனால் அவர் இரத்தம் சிந்திய மனிதராக இருந்தபடியால் தேவாலயத்தைக் கட்ட அனுமதிக்கப்படவில்லை. இவ்விதமாக அந்தப் பணிமுயற்சி சாலொமோனின்மீது விழுந்தது. அது மாபெரும் முயற்சியாக இருந்தது. முப்பதாயிரம் இஸ்ரவேலர்கள் பயன்படுத்தப்பட்டனர், மற்றும் 150,000 கானானியர்கள் இதற்கென்று சேவிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். எடுத்துரைக்க இயலாத அளவுக்கு உலோகங்களும் கற்களும் இத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டன. ஒருவேளை 1 இராஜாக்கள் 6:7ல் இந்தக் கட்டிடத் திட்டத்தின் தனிச்சிறப்பான பண்பு காணப்படலாம்: “ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை.”

கடைசியாக, ஏழு ஆண்டுகளுக்குப் பின்பு, தேவாலயம் தயாராயிற்று. அதன் பிரதிஷ்டை பற்றிய விவரங்கள் 1 இராஜாக்கள் 9 மற்றும் 1 நாளாகமம் 5 ஆகிய அதிகாரங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்தில், மக்களிடம் சாலொமோன் ஒரு உரையாற்றினார், மற்றும் தேவனுடைய மகிமை அந்தத் தேவாலயத்தை நிரப்பிற்று. இங்கு சாலொமோனுடைய பணியின் உச்சக்கட்டம் இருந்தது. இருப்பினும், இந்த உச்சக்கட்டத்தில், நாம் வரவிருந்த நிகழ்ச்சி பற்றிய ஒரு குறிப்பையும் காணுகின்றோம். தேவன் மீண்டும் சாலொமோனுக்குத் தரிசனமாகி, பின்வருமாறு கூறினார்,

> நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும். நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளை என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின் மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற்போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன்;

> அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச்சொல்லாகவும் இருப்பார்கள். அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, பகிடியாய் ஈசலிட்டு: “கர்த்தர் இந்த தேசத்துக்கும் இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்தது என்ன?” என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள்: “தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு, வேறே தேவர்களைப் பற்றிக் கொண்டு, அவர்களை நமஸ்கரித்துச் சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள் என்றார்” (1 இராஜாக்கள் 9:3-9).

தேவன், சாலொமோனிடத்திலும் இஸ்ரவேல் மக்களிடத்திலும், உண்மையில், “நீங்கள் என்னைவிட்டுத் திரும்பினால், வீழ்ச்சி என்பது எழுச்சி போன்றே மகாபெரியதாகவும் காட்சிக்குரியதாகவும் இருக்கும்!” என்று கூறினார்.

சுருக்கமாகக் கூறுவதென்றால், சாலொமோன் தேவனுக்குக் கீழ்ப்படிந்த அந்த விஷயங்களில் ஞானமிக்கவராக இருந்தார். இதன்விளைவாக, அவரது மகிமை பரவிற்று. அவரது ராஜ்யமானது சேபாவின் ராஜஸ்திரீ அங்கு வந்திருந்தபோது, “... நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன்; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது” என்று கூறியதுபோலவே இருந்தது (1 இராஜாக்கள் 10:7).

அலெக்சாண்டர் வைட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> எந்த ஒரு இளைஞரும் எப்போதாவது, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடியிருந்து, மற்ற எல்லாம் அவருக்குக் கூடக்கொடுக்கப்பட்டிருந்தது என்றால், அது சாலொமோன்தான். ... எப்போதாவது, எவரொருவரைப் பற்றியாவது, ஏற்கனவே பரிபூரணத்தன்மையை அடைந்திருந்தார் என்று கூறப்படமுடியுமென்றால், அது சாலொமோன்தான். ... எப்போதாவது வாழ்வின் சமுத்திரத்தில், ஒவ்வொரு மனிதரையும் எச்சரிக்கவும் ஒவ்வொரு மனிதருக்கும் போதிக்கவும், ஒளிவீசும் கலங்கரை விளக்கம் நிலைநாட்டப்பட்டது என்றால், அது சாலொமோன். ... எப்போதாவது எந்தப் பிள்ளையின் பிறப்பைப் பற்றியாவது, “பாவம் பெருகின இடத்தில், கிருபை இன்னும் ஏராளமாய்ப் பெருகிற்று,” என்று கூறப்பட்டதென்றால், அது நிச்சயமாகவே சாலொமோனுடைய பிறப்பு மற்றும் பிறப்புரிமைகள் மற்றும் கிருபைகள் ஆகியவற்றைப் பற்றித்தான்.

## *மிகவும் மதியீனமான மனிதர்*

*இந்த மகிமையான தொடக்கத்திற்குப் பின்பு, ஒருவர் அமைதியாக, சாலொமோனின் பணியில் கடைசி ஆண்டுகளுக்குப் கடந்து செல்லும்படி சோதிக்கப்படுவார். உண்மையில், 1 மற்றும் 2 நாளாகமங்கள் அதையே செய்கின்றன, ஆனால் இவ்விடத்தில் தேவன் நமக்கு ஒரு பாடத்தைக் கொண்டுள்ளார். சாலொமோனுடைய தொடக்ககால வாழ்வு மத்தேயு 6:33ன் - "... முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதி யையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்ற வசனத்தின் - விவரிப்பாக உள்ளது என்றால், அவரது பிந்திய வாழ்வு 1 கொரிந்தியர் 10:12ன்: "... இப்படியிருக்க தன்னை நிற்கிறவனென்று நினைக்கிறவன் விழாதிருக்கும்படி எச்சரிக்கையாயிருக்கக் கடவன்'' என்ற விவரிப்பாக உள்ளது. சாலொமோனின் மாபெரும் ஞானத்திற்கு நேரெதிரான வகையில், அவரது மதியீனத்தையும் நாம் கவனிக்க வேண்டும்.*

*முதலாவது, சாலொமோன் சுயநலத்தில் மதியீனமானவராக இருந்தார். அவர் தம்மைத் தேவனுக்கு மேலாக வைத்தார். அவர் தமது அரண்மனைக் கட்டுவதற்குப் பதிமூன்று ஆண்டுகளைச் செலவிட்டார். நமது காலத்தை நாம் முதலீடு செய்தல் என்பது நமது முன்னுரிமைகளைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கிறதென்றால், தேவனுக்கு ஒரு மாபெரும் ஆலயத்தைக் கட்டியெழுப்ப ஏழு ஆண்டுகளையும், தமக்கு ஒரு மகிமை யுள்ள அரண்மனையைக் கட்டியெழுப்ப ஏறக்குறைய அதைப்போன்று இருமடங்கு காலத்தையும் செலவிட்ட சாலொமோனைக் குறித்து என்ன கூறப்பட முடியும்? ஒருவேளை பின்வரும் பழமொழி - இது சாலொமோ னுடையதல்ல - அதை மிகச்சிறப்பாகக் கூறுகிறது: "தன்னில் தானே மூடிக்கிடக்கும் ஒரு மனிதன் ஒரு மிகச்சிறிய பொதியையே ஏற்படுத்துகின் றான்."*

*இரண்டாவது, அவர் உடன்பாடு ஏற்படுத்திக்கொண்டதில் மதியீன மானவராக இருந்தார். தேவாலயத்திற்கு அடுத்ததாக, சாலொமோன் புறதெய்வ ஆராதனைக்குப் பலிபீடங்களை எழுப்பினார்! இந்த "ஞான மிக்க" அரசரின் கீழ், இவரது தந்தை ஒடுக்குவதில் மிகவும் வைராக்கிய மாயிருந்த செயலான விக்கிரகாராதனையானது, தேவனுடைய வாசஸ் தலத்தின் அருகாமையில் நிலைநாட்டப்பட்டது! "உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ளுதல் வெற்றியின் இரகசியமாகும்'' என்று எனக்குக் கூறப்பட் டுள்ளது. இருப்பினும், உலகப்பிரகாரமாக ஞானமிக்கவர்களால் ஏற்படுத் தப்படும் சில உடன்பாடுகள் மதியீனத்தின் குறிக்கற்களாக உள்ளன. மதுபானம் அருந்தாத, இருந்தபோதிலும் காக்டெய்ல் விருந்துகளை அளித்து அதில் கலந்துகொள்கின்ற "கிறிஸ்தவ'' வியாபாரிகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். சிலர் தங்களுடைய வாடிக்கையாளர்கள் அல்லது பணியாளர்களுக்கு மதுபானங்களைப் பரிசுகளாகக்கூட அனுப்பி வைக்கின்றனர்.*

*மூன்றாவது, சாலொமோன் திருமணத்தில் மதியீனமானவராக இருந்தார். அவர் 300 மனைவிகளையும் 700 மறுமனையாட்டிகளையும்*

கொண்டிருந்தார். இந்த மனைவிகள் அவருடைய இருதயத்தைத் தேவனிடத்தில் இருந்து புறம்பே திருப்பினர்:

> *ராஜாவாகிய சாலொமோன், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: "நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள்" என்று சொல்லியிருந்தார்; ... சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமா யிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போலக் கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவா பியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான். இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான் (1 இராஜாக்கள் 11:1-8).*

தேவனுடைய ஆலயத்தைக் கட்டியவர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அகப்பட்டது எப்படி? அவர் அரசியல்ரீதியாக அனுகூல மானது எதுவாக இருந்தாலும், அதைச் செய்தார். அவர் பார்வோனின் மகள்களுக்கும் பின்பு எகிப்திற்கும் தம்மை அடமானம் வைத்தார், தம்மைச் சுற்றிலும் இருந்த மிகவும் ஐசுவரியமான மற்றும் மிகவும் வல்லமையான மக்களுடன் ஒப்பந்தத் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். அவர், "முடிவுதான் வழிமுறைகளை நியாயப்படுத்துகிறது" என்று நினைத்த முதல் மனிதராகவோ அல்லது கடைசி மனிதராகவோ இருக்கவில்லை. ''அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக'' என்று நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். அப்போஸ்தலரான பவுல், "நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது, இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கியமேது?" என்று கேட்டார் (2 கொரிந்தியர் 6:14). பல துறைகளில் - நட்புறவுகள், வியாபாரத் தொடர்புகள், ஆனால் விசேஷமாக திருமணம் ஆகியவற்றில் - ("சமமற்ற வகையில் நுகத்தில் பிணைக்கப்பட்டிருத்தல்," KJV) ஒன்றுகூடிக் கட்டப்பட்டிருத்தல் என்பது ஞானமற்றதாக உள்ளது. கிறிஸ்தவரல் லாத நபர்களை நேசித்து திருமணம் செய்துகொள்ளும் கிறிஸ்தவர்கள், தங்களை பெரும்பாலும் பிளவுபட்ட திருமண வாழ்வின் துன்பத்தில்

*பிடிபட்டவர்களாகக் காணுகின்றனர். உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழுதல் என்பது, ஒரு துணைவர்/துணைவி அந்த இலக்கைப் பகிர்ந்துகொள்ளும்போதே, போதிய அளவு கடினமாக இருக்கக்கூடும். ஒரு துணைவரின்/துணைவியின் விருப்பங்களுக்கு எதிராக, பரலோகத்தை அடைதல் - மற்றும் ஒருவர் தமது பிள்ளைகளை அந்தத் திசையில் வழிநடத்துதல் - என்பது மிகவும் கடினமாயிருக்கக்கூடும்.*

*நான்காவது, சாலொமோன் இன்பத்தையும் உடைமைகளையும் நாடியதில் மதியீனமானவராக இருந்தார். அவர் நேரடி அர்த்தத்தில், மதுபானம், பெண்கள், மற்றும் பாடல்கள் ஆகியவற்றில் மகிழ்ச்சியை நாடினார்; ஆனால் அதை அவரால் கண்டறியக் கூடாது போயிற்று. கடைசியில், அவர் ஏமாற்றம் அடைந்தார். மாபெரும் உடைமைகளும் மகிழ்ச்சியைத் தேடுதலும் வீணானவை என்று அவர் உணர்ந்தறியலானார். "எல்லாம் மாயை," என்று அவர் பிரசங்கி 1:2ல் அறிவித்தார்.*

*சாலொமோன் "எல்லாவற்றையும் கொண்டிருந்தார்" என்பதாகக் காணப்படுகிறது. இங்கு என்ன ஒரு அபாயம் உள்ளது! இயேசு, "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று கூறினார் (மாற்கு 10:25). மிக அதிகமான நல்ல விஷயங்கள் மிக அதிகமான மக்களை அழிக்கின்றன. வதந்திகள்கூட நியாயமான அளவுக்குக் கூறாதபடி, சாலொமோன் இவ்வளவு அதிகமான உடைமைகளையும், இவ்வளவு செல்வங்களையும் ஆதாயப்படுத்திக்கொண்டபின்பு, மரிக்கும்போது எதைவிட்டுச் சென்றார்? அவை எல்லாவற்றையும். செல்வத்தில் உண்மையான பாதுகாப்பைக் கண்டறிய முடியாது. சாலொமோன் இவை எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டிருக்கையில், ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு எகிப்தின் அரசர் வந்து இவை எல்லாவற்றையும் கொள்ளையடித்துச் சென்றார்.*

*அடிப்படையில், சாலொமோன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததில் மதியீனமானவராக இருந்தார். அவரது கீழ்ப்படியாமை அவரையும் அவரது நாட்டையும் புண்படுத்திற்று. சாலொமோன், "மிக அதிகமான சுயசீராட்டுதலினால் இளைப்படைந்து இறந்தார், அவர் தமக்குப்பின் வறியநிலையில் இருந்த கருவூலத்தையும், திருப்தியடையாத மக்களையும், தள்ளாடும் பேரரசையும் விட்டுச்சென்றார்" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். தேவன் எதைப்பற்றி சாலொமோனுக்கு எச்சரிக்கை செய்திருந்தாரோ, அதே விஷயம் மிகச்சரியாக நடந்தது. சாலொமோனுடைய மகனிடத்தில் இருந்து ராஜ்யம் எடுக்கப்படுவதைத் தேவன் அனுமதித்தார் (1 இராஜாக்கள் 11:9-13). ராஜ்யம் பிரிவினையினாலும் பின்பு அடிமைத்தனத்தினாலும் துன்புற்றது. அப்போஸ்தலரான பவுல் தமது மனமாற்றத்திற்கு முன்பு கண்டறிந்தது போலவே, இஸ்ரவேல் மக்களும் "முள்ளின்மீது உதைப்பது கடினம்" என்பதைக் கண்டறிந்தனர் (நடபடிகள் 26:14).*

## முடிவுரை

*சாலொமோன் எதில் அதிகமாயிருந்தார்? ஞானத்திலா அல்லது மதியீனத்திலா? அவர் மீட்கப்பட்டாரா அல்லது இழக்கப்பட்டாரா? தலைக்குள் ஒரு பெரும் யுத்தமே நடக்கிறது. ஒரு இத்தாலிய வரை கலைஞர், உயிர்த்தெழுதலின் நாளில் சாலொமோன் என்பதாக ஒரு படம் வரைந்தார். அந்தச் சித்தரிப்பில், சாலொமோன் ஆத்துமாக்களின் இரு ஊர்வலங்களை சந்தேகம் நிறைந்த வகையில் உற்றுநோக்கிக் கொண்டிருக் கின்றார், சிலர் நித்திய ஜீவனுக்காக வழியிலும் மற்றவர்கள் இருள் மற்றும் ஆக்கினைக்கான வழியிலும் செல்கின்றனர். அவர் தாம் எந்தக் குழுவைச் சேர்ந்துள்ளோம் என்பதில் நிச்சயமானவராக இல்லை. இது மக்களின் மனங்களில் உள்ள சந்தேகத்தைத் தொகுத்துரைக்கிறது.*

*பிரசங்கி என்ற புத்தகமானது, சாலொமோன் மனந்திரும்பினார் என்பதற்கு நிரூபணமாக உள்ளது என்று நான் தனிப்பட்ட முறையில் எப்போதுமே நம்பியிருக்கின்றேன். இருந்தாலும், அவர் தமக்கிருந்த அவ்வளவு அதிகாரத்தைத் தவறான வழியில் செலவிட்டது என்ன ஒரு துன்பமாக இருக்கிறது! அவர் மனந்திரும்பி அவரது ஆத்துமா இரட்சிக்கப் பட்டிருந்தாலும், சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இஸ்ரவேல் நாடு அழிவின் பாதையில் இருந்தது. சாலொமோன், "நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, ..." (பிரசங்கி 12:1) என்ற புத்திமதியை நமக்குக் கொடுத்ததில் வியப்பெதுவும் இல்லை.*

*தேவனுக்கு உங்கள் வாழ்வைக் கொடுப்பதன்மூலம் உங்கள் ஞானத்தைக் காண்பியுங்கள். "சாலொமோனைக் காட்டிலும் பெரிய வராகிய" (லூக்கா 11:31) அவரிடத்திற்குத் திரும்புங்கள். அவருக்கென்று உண்மையான ஊழியத்தில் தொடர்ந்திருங்கள், நீங்கள் சாலொமோனைக் காட்டிலும் ஞானமுள்ளவர் என்பதை நிரூபிப்பீர்கள்.*

***கற்க வேண்டிய பாடம்:***
***ஒவ்வொரு முடிவை மேற்கொள்வதிலும்***
***வழிநடத்துதலுக்குத் தேவனைக் கண்ணோக்குங்கள்.***

# “இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?”

## ஜேம்ஸ் W. நிக்கொல்ஸ்

*பிலிப்பி என்ற மக்கெதோனிய நகரத்தில் ஒரு நாள் இரவு வெகு நேர மாகியிருந்தது. இது அங்கிருந்த ரோமானியச் சிறைச்சாலைக் காவலருக்கும் சிறையிலிருந்த மனிதர்களுக்கும், கைதிகளில் இருவருக்கும் ஒரு வித்தி யாசமான இரவாயிருந்தது, அவர்கள் இருவரும் - தங்கள் விதியை நினைத்துப் புலம்பி, தங்களைத் துன்புறுத்துபவர்களைச் சபித்து, தங்கள் காயங்களினிமித்தம் அழுது புலம்புவதற்குப் பதிலாக - தங்கள் தேவனைத் துதித்துப் பாடல்களைப் பாடிக்கொண்டும் ஜெபித்துக்கொண்டும் இருந்தனர். இது மாத்திரமே அந்த இரவை வழக்கத்திற்கு மாறானதாக்கி யிருக்கும், ஆனால் அப்போது ஒரு மாபெரும் பூமியதிர்ச்சியானது சிறைச்சாலையின் அஸ்திபாரங்களைக் குலுக்கி, கதவுகளை உடைத்துத் திறந்து, கைதிகள் ஒவ்வொருவரின் விலங்கையும் அவிழ்த்துவிட்டது. உறக்கத்தில் இருந்து விழித்து எழுந்த சிறையதிகாரி பயத்தினால் பீடிக்கப் பட்டார். திறந்து கிடந்த சிறைச்சாலை, சிறையில் இருந்த கைதிகள் தப்பியோடியிருந்தார்கள் என்று அவருக்குக் கருத்துணர்த்திற்று. சிறைச் சாலை அதிகாரியைப் பொறுத்தவரைக்கும் அது, இடப்பாடு நிறைந்த இரவின் உச்சகட்டமாய்க் காணப்பட்டது. கைதிகள் தப்பியோடிய நிலையில், அவருக்கு மரணம் காத்திருந்தது; கைதிகள் சுதந்திரமாய்ச் சென்றுவிட்டதற்குப் பணயமாக அவரது உயிர் எடுக்கப்படும்.*

*இருப்பினும், கைதிகள் தப்பியோடி இருக்கவில்லை, அல்லது அவர்கள் சிறைச்சாலை அதிகாரி தனது சொந்த உயிரைப் போக்கிக்கொள்வதற் காகவும், தாங்கள் தப்பிச்செல்ல வழிகிடைப்பதற்காகவும் மூச்சை அடக்கிக்கொண்டு காத்திருக்கவும் இல்லை. இல்லை, வினோதமான இம்மனிதர்கள் உரத்துக் கூப்பாடு போட்டு சிறைச்சாலை அதிகாரியின் கையிலேயே அவனது பட்டயத்தை தடுத்து நிறுத்தி வைத்ததினால் அவர்கள் தங்களை இன்னும் வினோதமானவர்களாக ஆக்கிக்கொண்டனர். உடனடியாக, அவர் (சிறைச்சாலை அதிகாரி) விளக்குகளைக் கொண்டுவரச் சொல்லி உத்தரவிட்டு, பவுல் மற்றும் சீலா என்று நாம் அறிந்துள்ள அம்மனிதர்களின் பாதங்களில் விழுந்து, “ஆண்டவமாரே, இரட்சிக்கப் படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?” (நடபடிகள் 16:30) என்ற எல்லாவற்றிலும் முக்கியமான கேள்வியைக் கேட்டார். அவர் அந்தக் கைதி களின் தயவில் இருந்ததால், தமது சுயபாதுகாப்புப் பற்றியே அவர் இவ்வாறு கேட்டார் என்று சிலர் கூறலாம். ஆராய்வு செய்யும் இக்கேள்விக்கான நோக்கம் எதுவாயிருப்பினும், பவுலும் சீலாவும் அவருக்கு இயல்பான*

இரத்தத்தைப் பாய்ச்சும் இருதயத்தைவிட மிகஆழமாய் ஊடுருவிச் செல்லும் பதிலைக் கொடுத்தனர். அவர்கள் அவரது ஆத்துமாவின் சுகவீனங்களைக் குணமாக்கி, அவரை நித்தியத்திற்கும் இரட்சிக்கக்கூடிய பதிலைக் கொடுத்தனர்.

"இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்பது மனிதகுலம் முன்வைத்துள்ள கேள்விகள் எல்லாவற்றிலும் மாபெரும் கேள்வியாக உள்ளது. இது இக்கேள்விக்குப் பதில் தரக்கூடிய மிக மேலான ஒருவரைப் புரிந்துணர்ந்து கொள்வதினாலும், இது நம்பிக்கையைத் தேடும் தாழ்மையின் ஆவியொன்றைச் சுட்டிக்காண்பிப்பதினாலும் மாபெரும் கேள்வியாக உள்ளது. மனிதன் பாவ வழியின் தொடக்கத்தில் இருந்து, வலிக்கும் இருதயங்களை இக்கேள்வி தொந்தரவு செய்துள்ளது. மனிதகுலம் இப்பூமியில் குடியிராமற்போகும் வரைக்கும், மக்கள் "இரட்சிக்கப் படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று உரத்துக் கூவும்படி தூண்டப்படுவார்கள். பல பதில்கள் தரப்பட்டுள்ளன; அவற்றில் பல தவறானவைகளாகவும் வீணாண நம்பிக்கையின்மூலம் ஆத்துமாக்களை அழிவுக்கென்று முத்திரை இடுபவைகளாகவும் இருப்பது துன்பகரமான தாகும். "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு, எந்த ஒரு பதிலும், ஆச்சரியம் நிறைந்த இரட்சகரின் உதடுகளில் இருந்து வராத வரையில், அல்லது ஏவுதல் பெற்ற அவரது தூதுவர்களின் வார்த்தைகள் பதிவுசெய்த தேவனுடைய பரிசுத்த வசனத்தில் இருந்து வராத வரையில், நான் திருப்தி அடையாத வகையில் என் ஆத்துமாவை அசைக்கிறது.

பயங்கரமான சூழ்நிலைகள் சிலவற்றில் இருந்து தப்பிப்பதற்காக ஆத்துமா கதறுகின்றபோது, "இரட்சிக்கப்படுவதற்கு" என்பது உறுதி யற்ற சொற்றொடர்களாக மனதில் பதிவதில்லை. பல நூற்றாண்டுகள் காலமாக மனிதன், மரணத்திற்குப் பின்பு தனக்கு என்ன நேரிடும் என்பது பற்றித் தொந்தரவு கொண்டிருக்கின்றான். யோபு, "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?" என்று கேட்டார் (யோபு 14:14). எந்த ஒரு ஆணும், பெண்ணும் - சிறுவன், அல்லது சிறுமியும், தேவனுடைய வசனத்தை வாசித்து, அதை விசுவாசிக்கும்போது, பகலைத் தொடர்ந்து இரவு வருவதைப் போன்று, மரணத்தைத் தொடர்ந்து மீண்டும் வாழ்வு வருகிறது - அந்த வாழ்வு பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ செலவிடப்பட வேண்டும் - என்பதை விசுவாசிக்காமல் இருக்க இயலாது. எனவே, நரகத்தின் அக்கினிகளுக்குத் தப்பித்து, பரலோகத்தின் கோட்டைகளுக்குள் பிரவேசிப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வதே நமது தேடுதலாக உள்ளது. நாம் ஒன்றாய் இணைந்து - மனிதருடைய வார்த்தைகளை அல்ல, ஆனால் தேவனுடைய பரிசுத்த வசனத்தையே - ஊக்கமாய்ப் படிக்க வேண்டும். சத்தியத்தை அறிதல் என்பது நம்மைப் பாவத்தின் கட்டுகளில் இருந்து விடுதலையாக்க முடியும். தேவனுடைய வசனம் தெளிவானதாக உள்ளது, ஆனால் மக்கள் இரட்சிப்புக்கு மனிதனின் நம்பிக்கையற்ற திட்டங்களுக்குள் ஆழ்ந்துள்ளனர். மனிதனுடன் தேவன் கிரியை செய்யும் விதம் பற்றிய நமது தப்பெண்ணங்கள், தவறான கருத்துக்கள்,

மற்றும் மூடநம்பிக்கைகள் ஆகியவற்றை அழித்தல் என்பது கடினமானதாக, ஆனால் இன்றியமையாததாக உள்ளது. நமது இரட்சிப்பைப்பற்றிய கேள்வியை மிகவும் இலேசாக எடுத்துக்கொள்வதற்கு, வாழ்வு என்பது மிகவும் குறுகியதாகவும், நித்தியம் என்பது மிகவும் நீண்டதாகவும் மற்றும் நரகத்தின் அக்கினிகள் மிகவும் வெப்பமானதாகவும் இருக்கின்றன.

"இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற ஆராய்வுச் சிந்தனைக்குப் பதிலானது கிறிஸ்துவுக்குள் காணப்படுகிறது. சிலுவையும் அதன் செய்தியும் மாத்திரமே நமக்கு நம்பிக்கையளிக்க முடியும். அற்றலைந்து திரியும் மனிதனின் பாவங்கள் கழுவப்படும்படிக்கு, தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து, கல்வாரியில் தமது இரத்தத்தைச் சிந்தினார். சிலுவையையும், சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தையும் விட்டுவிடுகிற எந்த ஒரு திட்டத்தையும், அதை அறிவிக்கச் செல விடப்படும் காலமும் அல்லது அது எழுதப்பட்ட காகிதமும் மதிப்பற்ற தாக்குகிறது. கல்வாரியில் கிறிஸ்து நம்மைக் கிரயம் கொண்டு நமது இரட்சிப்பைச் சாத்தியமாக்கினார். தேவனே இரட்சிப்பைத் தொடங்கு கிறவராய் இருக்கின்றார், கிறிஸ்து அதன் உரையாளராய் இருக்கின்றார், மற்றும் இயேசுவின் இரத்தமே அதன் கிரயமாய் இருக்கிறது. தேவன் தம் குமாரன் மூலமாகக் கட்டளையிட்டது எதுவாயிருப்பினும், அது நமக்கு பரிசுத்தமானதாயிருக்கிறது. மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு அவன் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்?

முதலாவது, மனிதன் தனது இருதயத்தை, அன்பின் அற்புதமான வரலாற்றிற்குத் திறந்து, கிறிஸ்துவின் மூலமாக வருகிற நிபுணத்துவம் வாய்ந்த வார்த்தைகளைக் கேட்க வேண்டும். நாம் அறிந்திராத ஒரு இரட்சகரிடத்தில் நாம் கிட்டிச் சேருதல் என்பது நமக்குச் சாத்தியமற்றதாய் இருக்கிறது. ரோமர் 10:17ல் பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று கூறினார். விசுவாசம் என்பது மனிதனின் இரட்சிப்பில்/மீட்பில் அவனது [செயலின்] பாகமாயுள்ளது என்பதை எந்த மத முறைமையும் மறுப்பதில்லை. இந்த விசுவாசம் கிறிஸ்துவின் வசனத்தைக் கேட்பதினால் மாத்திரமே வரும் என்று பவுல் கூறினார். இது தேவனிடத்தில் இருந்து மனிதனுக்கு ஒரு நேரடிக்கொடையாக வருவதில்லை, மனிதனின் வேண்டுதலாலும் வருவதில்லை, ஆனால் தேவனுடைய வசனத்தை ஊக்கமாய், உண்மை யாய்க் கேட்பதினாலேயே வருகிறது.

மக்களில் சிலர் கேள்விப்பட மறுக்கின்றனர் அல்லது தாங்கள் கேள்விப்பட விரும்புவதை மாத்திரம் கேட்கின்றனர். அவர்கள் வேதவசனத்தின் பகுதியொன்றை இரண்டாகத் துண்டித்து, தங்கள் செவித்தினவுக்கேற்ற பகுதியை மாத்திரம் கேள்விப்படுவதில் மனத்தடு மாற்றம் அடைவதில்லை. தீமோத்தேயுவைப் பவுல், "ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, ... சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்" என்று எச்சரித்தார் (2 தீமோத்தேயு 4:3, 4). நாம் எவ்வளவுதான் நமது காதுகளை அடைத்துக்

கொண்டாலும், நியாயத்தீர்ப்பு, பரலோகம், மற்றும் நரகம் ஆகியவற்றின் உண்மைத்தன்மைகளை அழித்துப்போட இயலாது.

மற்றவர்கள் எவ்வாறு கேள்விப்படுவது என்று அறியாதிருக்கின்றனர். அவர்கள் வேதவசனங்களின் பிரிவுகளையோ அல்லது அவற்றை நமக்கு எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதையோ அறிவதில்லை. தீமோத்தேயுவுக்குப் பவுல், "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்று கூறினார் (2 தீமோத்தேயு 2:15). "நிதானமாய் பகுத்து" என்றால் "சரியாகப் பிரித்து" என்று அர்த்தப்படுகிறது. வேதவசனங்களை நாம் பகுத்துப் பார்க்காத வரையில், தேவனை நாம் தேடுவதில் இழந்துபோகப்பட்டவர்களாகவே, நம்மை நாமே காணுவோம்.

கேள்விப்பட பிரயாசப்பட்டும் கேள்விப்பட இயலாதவர்களே மிகவும் பரிதாபத்திற்கு உரியவர்களாய் இருக்கலாம். அவர்களின் காதுகள், கள்ளப்போதனை என்ற மெழுகினால் அடைபட்டிருக்கின்றன. அவர்கள் தங்களின் தவறான கருத்துக்களைப் புறம்பே தள்ளாத வரையில், தேவனுடைய வசனத்தைக் கேள்விப்பட இயலாதவர்களாய் இருக்கின்றனர். நம்மில் எவரும் இப்படிப்பட்ட கேட்பாளர்களைப்போல் இருந்துவிடக் கூடாது என்பதே எனது ஊக்கமான ஜெபமாக உள்ளது. "நான் சத்தியத்தை அறியவே விரும்புகின்றேன், நான் தவறானவனாக இருந்திருந்தால், எது சரியானது என்று அறிய விரும்புகின்றேன். நான் அதை அறிந்தவுடன், அதற்குக் கீழ்ப்படியக்கூடிய தைரியமும் தாழ்மையும் கொண்டிருக்க வேண்டும் என்று ஜெபிக்கின்றேன்" என்ற எண்ணப்போக்குடன் நாம் தேவனுடைய வசனத்தை படிப்போமாக.

தேவனுடைய வசனத்தை உண்மையுடன் கேள்விப்படுதலின் மூலமாக மாத்திரமே, இரட்சிக்கக்கூடிய விசுவாசத்தை, "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு தரப்பட்ட பதிலில் தேவன் கட்டளையிட்டுள்ள வகையிலான விசுவாசத்தை நாம் மேம்படுத்திக் கொள்ள இயலும். மக்கள் விசுவாச விஷயத்தில் குழப்பப்பட்டு திசை திருப்பப்பட்டுள்ளனர். நாம் விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிக்கப் படுகின்றோம் என்று ஒருவர் போதிக்கின்றார்; இரட்சிப்பு என்பது கிரியைகளினால் மாத்திரம் வருகிறது என்று இன்னொருவர் போதிக்கின்றார்; இன்னும் ஒருவர், இவையிரண்டுமே தேவனுடைய திட்டத்தில் அங்கம் வகிப்பதில்லை, ஆனால் மனிதன் தனது பிறப்பிற்கு முன்பாகவே, இரட்சிப்புக்கோ அல்லது நிர்மூலமாவதற்கோ தேர்ந்துகொள்ளப்பட்டு விடுகின்றான் என்று போதிக்கின்றார். மனிதர்களின் இந்தத் தத்துவங்களும் உபதேசங்களும் நம்பிக்கை அளிப்பதில்லை. மறுரூப மலையில் மோசேக்கும் எலியாவுக்கும், கிறிஸ்துவுக்குத் தரப்பட்ட அதே அதிகாரத்துவத்தைப் பேதுரு கொடுக்க முயற்சி செய்ததற்காக, அவரைத் தேவன் கடிந்து கொண்டார். அவர், "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்!" என்று கட்டளையிட்டார் (மத்தேயு 17:5). நாம் அந்த வார்த்தைகளைக் கவனிக்க வேண்டியது

அவசியமாய் இருக்கிறது. மோசேயும் எலியாவும் கிறிஸ்துவின் அளவுக்கு உயர முடியவில்லை என்றால், நாமகரணக்கூட்டங்களை உண்டாக்கின ஏவுதல் பெற்றிராதவர்கள் நிச்சயமாகவே அவ்வாறு செய்ய முடியாது. நாம் நமது ஆண்டவரும் மீட்பருமாகிய கிறிஸ்து கூறுவதை மாத்திரம் கேட்கவேண்டும்.

நமது கேள்விப்படுதலின் மூலமாக, நாம் கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி நம்மை இயக்கப் போதுமான அளவுக்கு அவரில் ஒரு விசுவாசத்தை அந்தக் கேள்விப்படுதல் எழுப்ப வேண்டும். அந்த விதமான விசுவாசம் இல்லாமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது. மக்களில் சிலர், "நான் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளேன், ஆனால் அவர் கட்டளையிட்டுள்ள யாவற்றையும் நாம் செய்யும்படி அவர் எதிர்பார்க்கின்றார் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை" என்று கூறுகின்றனர். அது வேதாகமத்தின்படியான இரட்சிக்கும் விசுவாசமல்ல. நீங்கள் தப்பிக்க வழியெதுவுமற்ற ஒரு ஆழமான கிணற்றினுள் இருக்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் சுவர்கள் உங்களால் ஏறிவர இயலாதபடி செங்குத்தாக இருக்கின்றன, இருள் மற்றும் வண்டல் சேற்றின் ஆழங்களில் நீங்கள் இறந்தொழியும் நிலையில் இருக்கின்றீர்கள். பின்பு அவ்வழியே வரும் ஒருவர் உங்கள்மீது பரிதாபப்படுகின்றார். அவர் கிணற்றினுள் எட்டிப்பார்த்து சத்தமிட்டு, அவர் உங்களைக் காப்பாற்றுவதாகக் கூறுகின்றார். நீங்கள் விரும்புகின்றவாறு மாத்திரமே உங்களை அவர் காப்பாற்ற வேண்டும் என்று நீங்கள் திரும்பி குரல்கொடுக்க மாட்டீர்கள் என்பது நிச்சயம் தானே! நீங்கள் செய்யும்படி அவர் கூறும் எந்தச் செயலையும் நீங்கள் செய்வீர்கள். இரட்சிப்பு பற்றிய நமது தேடுதலும் அவ்வாறே இருக்க வேண்டும். கிறிஸ்து ஒரு கட்டளையை ஏன் கொடுத்தார் என்று கேட்பதல்ல, ஆனால் அதை ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிதலே இழந்துபோகப்பட்டவர்களின் கடமையாய் இருக்கிறது. நமது ஆத்துமாவின் இரட்சிப்புக்கு, தேவனுடைய சித்தத்தை அறிந்து அந்த சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படி நம்மை இயக்கும் விசுவாசத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். எபிரெயர் 11:6, "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" என்று கூறுகிறது.

புதிய ஏற்பாட்டின் இரட்சிக்கும் விசுவாசம், கீழ்ப்படிதலை உள்ளடக்கியிருக்கிறது, ஏனெனில் யோவான் 3:36ல் கிறிஸ்து, "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்று கூறினார். இங்கு கர்த்தர், "விசுவாசித்தல்" ["believe"] மற்றும் "கீழ்ப்படிதல்" ["obey"] என்ற வார்த்தைகளை ஒருபொருள் சொற்றொடர்களாகப் பயன்படுத்தினார். ஒருவரின் ஆத்துமாவை இரட்சிக்கும் விசுவாசமானது செயல்பாட்டிற்குத் தூண்டும் விசுவாசமாக உள்ளது.

பவுல், கொரிந்து நகரில் இருந்த ஜெபஆலயத்தில் சுவிசேஷத்தைப்

*பிரசங்கித்தபோது, பிரதானத் தலைவனாகிய கிறிஸ்பு என்பவர், மனமாற்றப்பட்டார். லூக்கா அந்த மனமாற்றம் பற்றி அறிக்கை தந்தபோது, அவர் கிறிஸ்பு விசுவாசித்தார் என்று மாத்திரமே கூறினார்: "ஜெபஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான் ..." (நடபடிகள் 18:8). கிறிஸ்பு ஒரு கிறிஸ்தவராவதற்கு என்ன செய்தார்? அவர் தமது பாவத்திலிருந்து மனந்திரும்பினாரா? மனந்திரும்புதல் பற்றி இவ்வசனத்தில் எதுவும் கூறப் படுவதில்லை. அவர் விசுவாசித்தார்; கிறிஸ்புவின் மனமாற்றம்பற்றி நடபடிகள் புத்தகம் முழுவதிலும் இது மாத்திரமே கூறப்பட்டுள்ளது. அந்த மனமாற்றத்தில் கிறிஸ்பு வேறு ஏதேனும் செய்திருந்தார் என்றால், விசுவாசம் என்பது அவரது பிறசெயல் களையும் உள்ளடக்கிற்று என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். பிற்பாடு, பவுல் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதி, அவர்கள் மனிதர்களின் பெயர்களைச் சூடிக்கொண்டிருத்தல் பற்றி அவர்களைக் கடிந்துகொண் டார். இப்படிப்பட்ட கடிந்துகொள்ளுதல் இன்றைய நாட்களில் நமக்கு எவ்வளவாகத் தேவைப்படுகிறது! பவுல் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்திராதது பற்றி மகிழ்ச்சி அடைந்தார், அவர் அவ்வாறு ஞானஸ் நானம் கொடுத்திருந்தால், அவர்கள் தங்களை பவுலின் மதத்தை சேர்ந்தவர்கள் என்று கருதியிருப்பார்களே:*

> *கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப் பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங்கொடுக்கவில்லை; இதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் ... (1 கொரிந்தியர் 1:13-15).*

*பவுல் கிறிஸ்புவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார், ஆனால் நடபடிகள் புத்தகம், அவர் விசுவாசித்தார் என்று மாத்திரம் கூறுகிறது. இது, "விசுவா சித்தல்" என்ற வார்த்தையானது ஞானஸ்நானம் உட்பட மனமாற்றம் முழுவதையும் அரவணைத்து நிற்பதைக் காண்பிக்கிறது என்பது உறுதி.*

*பிலிப்பியச் சிறையதிகாரி, பவுல் மற்றும் சீலா ஆகியோருக்கு முன்பாகக் கீழே விழுந்தபோது, "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று பதில் உரைத்தனர் (நடபடிகள் 16:31). இங்கு இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்த மனிதர் ஒருவர் இருந்தார், மற்றும் அவர் விசுவாசிக்க வேண்டும் என்று அவருக்குக் கூறப்பட்டது. 34ம் வசனத்தில் நாம் காணுகின்றபடி அம்மனிதர் இன்னமும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்க வில்லை; அவர் சந்தோஷமாயிருந்தார், ஏனெனில் அவர் இரட்சிக்கப் பட்டிருந்தார். 31 மற்றும் 34 ஆகிய வசனங்களுக்கு இடையில், சிறையதிகாரி*

*விசுவாசிக்க வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். 32 மற்றும் 33 வசனங்களில், விசுவாசித்தலின் செயல்முறைகளில் அவர் என்ன செய்தார் என்பதை நாம் காணமுடியும்:*

> *அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலே தானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*இப்போது நாம் முழு வரலாற்றையும் காணுகின்றோம். அவர் வசனத்தைக் கேள்விப்பட்டார். அந்த வசனம் அவரைத் தேவன்மீது நம்பிக்கை வைக்கும்படி வழிநடத்தியது. விசுவாசித்தலில் அவர், அவர்களின் காயங்களைக் கழுவியதன்மூலம் மனமாற்றம் அடைந்தார் என்பது தெளிவாகிறது. அவர் உடனடியாக ஞானஸ்நானம் பெற்றார் என்று நாம் வாசிக்கின்றோம். இவ்வசனப் பகுதியில்கூட இது மிக அடிக்கடி தவறாக பயன்படுத்தப்படுகிறது, விசுவாசித்தல் என்பது மனமாற்றத்தின் முழு செயல்முறையாக உள்ளது என்பதை நாம் காணுகின்றோம்.*

*இப்படிப்பட்ட செயலுக்குக் காரணமான விசுவாசத்தை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்கின்றோம்? அதற்காக ஜெபிப்பதால் அல்ல, அற்புதமான சில வகையில் அல்ல, ஆனால் தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுவ தினாலேயே பெற்றுக்கொள்கின்றோம். விசுவாசம் என்பது மனிதர் களுடைய உபதேசத்தையல்ல, ஆனால் தேவனுடைய வசனத்தை வாசிப்ப தினாலேயே வருகிறது. வேதாகமத்தின்படியான இரட்சிக்கும் விசுவாசம் என்பது, மனிதர்களைக் கீழ்ப்படிதலுக்கு இயக்குகிற விசுவாசமாக உள்ளது. எபிரெயர் 5:9, "… தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் [கிறிஸ்து] காரணரானார்" எனக் கூறுகிறது.*

*நீங்கள் தேவன்மீது உங்கள் விசுவாசத்தை வைத்து, அவரது சித்தத்திற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிவீர்களா? நீங்கள் உங்கள் தேவனிடத்திற்கு வந்து, அவரது பரிசுத்த வார்த்தையை விசுவாசித்து, உங்கள் மீறுதல்களில் இருந்து மனந்திரும்பி, அவருடைய குமாரனின் ஆசீர்வதிக்கப்பட்ட பெயரை அறிக்கை செய்வீர்களா? ஞானஸ்நானத்தின் தண்ணீர்க் கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவதால், ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத் தினால் உங்கள் பாவங்கள் ஏன் கழுவப்படக்கூடாது? பின்பு நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய ஜீவன் உள்ளவர்களாக எழுந்திருக்க முடியும். அதை நீங்கள் இன்றே செய்யமாட்டீர்களா? உங்களுக்காகவும் உங்கள் அடைவிடத்திற்காகவும் நாங்கள் ஜெபிக்கின்றோம் என்பதை நினைவில் வையுங்கள்.*

---

*இந்தப் பாடம், Herald of Truth என்ற வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சியில் உள்ள "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" மற்றும் "இரட்சிக்கும் விசுவாசம்," என்ற இரு பாடங்களில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளது.* Reprinted by permission. James W. Nichols, G. K. Wallace, and C. E. McGaughey, *The Churches*

# "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

## (பகுதி 2)

### ஜேம்ஸ் W. நிக்கொலஸ்

*எவரொருவரின் வாழ்விலும் சில வேளைகளில் துக்கம் என்பது பேரழிவாகக் காணப்படுகிறது, ஆனால் துக்கம் மற்றும் ஏமாற்றம் ஆகியவற்றின் ஆழத்தில் இருந்தே மாபெரும் படைப்புகள் உண்டாக்கப் பட்டுள்ளன. தேவனுக்கேற்ற துக்கத்திலும் விஷயம் இவ்வாறாகவே உள்ளது. வாழ்வுகளை மாற்றிய துக்கத்திற்காகப் பவுல் தேவனுக்கு நன்றி செலுத்தினார். கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் பின்வரு மாறு கூறினார்,*

> *இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாக துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாத படிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது (2 கொரிந்தியர் 7:9, 10).*

*மீட்பிற்குத் தேவனுடைய திட்டத்தில் துக்கத்தின் பங்குப் பணியை நாம் பரிசோதித்துப் பார்ப்போம். முந்திய பாடம் ஒன்றில், நாம் புதிய ஏற்பாட்டில் இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தின் தனிச்சிறப்பைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தோம். இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் என்பது செயல்படும் விசுவாசமாக உள்ளது. மனமாற்றத்தின் கிரியைகள் இல்லையென்றால், அது செத்த விசுவாசமாகிறது. யாக்கோபு, "கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது" என்று கூறினார் (யாக்கோபு 2:26). ஒரு உண்மைக்கு மனதில் சம்மதம் தெரிவித்தல் மாத்திரம் இரட்சிக்கும் விசுவாசத்தில் அடங்கியிருப்பதில்லை. "பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" என்று யாக்கோபு நமக்கு நினைவூட்டினர் (யாக்கோபு 2:19). இவ்விதம ாக இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் என்பது ஒரு கடிகாரம் போன்றதாக உள்ளது. நான் எனது கடிகாரத்தின் பின்பாகத்தை எடுத்துவிட்டு அதன் உட்புறம் வேலைசெய்வதைக் கண்ணோக்க முடியும். அதில் பல பாகங்கள் உள்ளன, ஆனால் அவை ஒரே கடிகாரத்தை ஏற்படுத்துகின்றன. நான் அந்தக் கடிகாரத்தின் வேலைப்பாடுகளில் இருந்து ஒரு பகுதியை - அல்லது*

*எல்லாவற்றையும் - எடுத்துப் போட்டுவிட்டால், அது பயனற்றதாகிவிடும். அதுபோன்றே, நாம் விசுவாசத்தின் கிரியைகளை நீக்கிப்போட்டால், அது செத்த விசுவாசமாகிவிடுகிறது; அது வெறுமையானதாக உள்ளது. மனதின் இந்த சம்மத நிலையைச் சிலர் "விசுவாசம்" என்று அழைக்கலாம், ஆனால் அப்படிப்பட்ட விசுவாசம், ஒரு வெறுமையான கடிகாரத்தைப் போன்று பயனற்றதாயிருக்கும்.*

*ஒருவர் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவன் தமது இரக்கத்துடன் கூடுதலாக, வாழ்கின்ற மற்றும் கிரியை செய்கின்ற விசுவாசத்தைக் கேட்கின்றார் என்று நாம் கண்டறிகின்றோம். ஆகையால், இழந்துபோகப்பட்டுள்ள மனிதருக்குத் தரப்பட்டுள்ள கட்டளைகளைக் கண்டறிய நாம், தேவனுடைய வசனத்தை ஆராய வேண்டும். நம்மை இரட்சிப்பதற்குத் தேவன் பாதிவழி வரையில் வந்தாலும், நாம் அவரது கிருபையை ஏற்றுக்கொள்வதற்கு - அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப் படிதலின் மூலமாக - அவரிடத்தில் சென்று சேர வேண்டும் என்பதே தொடக்கம் முதல் தேவனுடைய திட்டமாக இருந்துள்ளது. நாம், வசனத் திற்கு நமது இருதயங்களைத் திறந்து கீழ்ப்படியும் ஆவலுடன் தேவனு டைய கட்டளைகளைக் கேள்விப்பட வேண்டும் என்பதே எனது ஜெபமாக உள்ளது.*

*நாம் பாவிகளாய் இருக்கையிலேயே கிறிஸ்து நமக்காக மரித்ததால் (ரோமர் 5:8), நமது ஒப்புக்கொடுத்தலைப் பின்தொடர்ந்து உண்மை யான மனந்திரும்புதல் ஏற்பட வேண்டும். "அவர் இருக்கிறார் என்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறார் என்றும்" நாம் உணர்ந்தறிய வேண்டும் (எபிரெயர் 11:6), இருப்பினும் அவர் தம்மைப் புறக்கணித்து தமக்குக் கீழ்ப்படியாதவர்களுக்குத் தண்டனை அளிப்பவராகவும் இருக்கின்றார் (2 தெசலோனிக்கேயர் 1:7, 8). இந்த விசுவாசத்திற்கு வருவதில், நாம் இருதயத்தில் மாற்றத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பி இனி அவற்றில் நடப்பதில்லை என்று தீர்மானிக்க வேண்டும். சில மக்கள் மனந்திரும்பு தலையும் மன்னிப்பையும் போட்டுக் குழப்பிக்கொள்கின்றனர். நமது இரட்சிப்பில், மனந்திரும்புதல் என்பது நமது பகுதியாகவும் மன்னிப்பு என்பது தேவனுடைய பகுதியாகவும் உள்ளன என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். நமது இருதயத்தில் பாவம் இருந்து, நாம் அதைக்குறித்து மேன்மை பாராட்டினால், நாம் கிறிஸ்தவத்திற்கு மனமாற்றப்பட இயலாது. மனமாற்றச் செயல்பாட்டினூடே கடந்து சென்றுள்ள பலர், தங்கள் இருதயங்களில் இருந்து மனந்திரும்பியிராத காரணத்தால் ஒருக்காலும் மன மாற்றப்பட்டிருப்பதில்லை என்பதை நான் வருத்தத்துடன் கூறுகின்றேன். திரளான மக்கள் கூட்டாத்தாரிடம், "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் ..." என்று இயேசு கூறினார் (லூக்கா 13:3).*

*எல்லாக் காலங்களிலும் மக்கள் மனந்திரும்புதலின் முக்கியத்து வத்தைக் கண்டுள்ளனர் என்றே காணப்படுகிறது. யோபுவின் காலத்தில் கூட, மக்கள் மனந்திரும்புதலின் அவசியத்தை உணர்ந்திருந்தனர். யோபு*

பாவத்தினிமித்தம் துன்புற்றார் என்று அவரது நண்பர்கள் நினைத்தனர். அவர்களில் ஒருவரான சோப்பார் என்பவர், மனந்திரும்புதலுக்கு யோபுவின் கவனத்தை ஈர்ப்பதன்மூலம் அவர் தமது இடர்ப்பாடுகளில் இருந்து அவரை வெளிக்கொண்டு வர முயற்சி செய்தார்: "நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி, உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரித்தால் நலமாயிருக்கும். உம்முடைய கையிலே அக்கிரமம் இருந்தால், அதைத் தூரத்தில் அகற்றிவிட்டு, அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்கவொட்டாதிரும்" (யோபு 11:13, 14). வேதாகமத்தின் மிகப்பழைய புத்தகங்கள் ஒன்றில் உள்ள இந்த வார்த்தைகளைக் காட்டிலும் மனந்திரும்புதலுக்கான அதிக மேன்மையான அழைப்பை வேறு எவ்விடத் திலும் நாம் காண இயலாது.

பழைய ஏற்பாட்டில் மனந்திரும்புதலுக்கான பல நிகழ்ச்சிகளை நாம் காண முடியும்; ஆனால் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்புகையில், நாம் புதிய நாளின் வருகை முன்னுரைக்கப்படும் உதயவானத்தில்கூட மனந்திரும்புதல் பற்றிய பிரசங்கத்தைக் காணுகின்றோம். எஜமானரின் முன்னோடியான யோவான், யூதேயாவின் வனாந்தரப் பகுதியில் திரளான மக்கள் கூட்டத்தாருக்கு, "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று கூறிப் பிரசங்கித்தார் (மத்தேயு 3:2). "மனந்தி ரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள், …" என்று எச்சரிக்கும் அவரது சத்தங்களை கேட்க முடிகிறது (லூக்கா 3:8). பின்பு நாம், தேவகுமாரன் மக்கள் மத்தியில் நடக்கையில், அதே எச்சரிக்கைக் குறிப்பை எடுத்துரைத்ததைக் கேட்க முடிகிறது: "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத்தேயு 4:17). கிறிஸ்து தமது வாழ்வின் எஞ்சிய காலம் - மூன்றரை ஆண்டுகள் - முழுவதிலும் தமது சீஷர்களுடன் சேர்ந்து, மக்களை மனந்திரும்பும்படி அழைத்துக்கொண்டிருந்தார். அவரது ஊழியம் முடிக்கப்பட்ட பின்பு - அவர் சிலுவையில் மரணத்தை ருசிபார்த்து, மூன்றாம் நாளில் கல்லறையில் இருந்து வெளியே வந்ததனால் மரணத்தை வெற்றிகொண்ட பின்பு - அவர் தமது பிதாவினிடத்திற்கு ஏறிச்செல் வதற்குச் சற்றுமுன்னர், "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" என்று கூறுவதை (லூக்கா 24:46, 47) நாம் கேட்க முடிகிறது.

அவர் இவ்வார்த்தைகளைத் தேர்ந்துகொண்ட எண்ணிக்கையில் உள்ளவர்களுக்குப் பேசியபின்பு, அவர் மேகங்கள் வழியாகப் பரலோகத் திற்கு ஏறிச்சென்றதை அவர்கள் கண்டனர். பின்பு அந்தக் குழுவினர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே எருசலேமுக்குச் சென்றனர். "[அவர்களை] சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும்"படிக்கு (யோவான் 16:13), வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வல்லமைக்காக அவர்கள் காத்திருக்கையில், அவர்கள் தேவனிடத்தில் ஜெபித்தனர். பெந்தெ கொஸ்தே நாளன்று, அவர்கள் யாவரும் கூடிவந்திருக்கையில், தேவனு டைய ஆவியானவர் அவர்கள்மீது இறங்கி வந்தார், மற்றும் அவர்கள்

செய்யும்படி இயேசு கூறியிருந்தவற்றை அவர்கள் செய்வதற்கு, தெய்வீக வல்லமை அவர்களுக்கு அருளப்பட்டது. இயேசு அவர்களிடத்தில் கூறியிருந்தது என்ன? "... மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக்கா 24:47). பின்பு, ஆவியானவரின் வல்லமையுடன், அவர்கள் பிரசங்கிக்கத் தொடங்கினர். திரளான கூட்டத்தார் கூடிவந்து அதைக் கேட்டனர். பேதுரு அந்த அற்புதமான பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். அவரது வார்த்தைகளைக் கேட்ட மக்கள், தாங்கள் இரட்சகரைக் கொலைசெய்திருந்ததை உணர்ந்தனர். நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்,

> இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, "நாங்கள் என்னசெய்யவேண்டும்" என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" [என்று சொன்னார்] (நடபடிகள் 2:37, 38).

என்ன செய்யப்பட வேண்டும் என்று கிறிஸ்து கூறியிருந்தாரோ, அதையே அப்போஸ்தலர்கள் மிகச்சரியாகத் தொடங்கியிருந்தனர்: "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும். ..." அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படுதல், ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் நிச்சயமாகவே, சரியான வார்த்தைகளை சரியான வழிமுறையில் கூறினர். பேதுரு, "மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். இவ்விதமாக, என் நண்பர்களே, குற்றம் உணர்த்தப்பட்டு, நீண்டகாலத்திற்கு முன்னர் ஏக்கத்துடன் இருந்தவர்களைப் போன்றே இன்றிருக்கும் ஆத்துமாக்களுக்கு நாம், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; ..." என்று கூறும்போது, நிச்சயமாகவே நாம் தவறானவற்றைச் செய்வதில்லை.

பாவமன்னிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில், ஞானஸ்நானம் பெறுதலைப் போன்றே மனந்திரும்புதலுக்கான அவசியமும் இருந்தது மற்றும் இருக்கிறது. மனந்திரும்புதல் என்பது வாழ்வை நேராக்குகிறது; அது ஒரு நபரைத் தனது சிந்தையில் சரியான வழிக்குத் திரும்பச் செய்கிறது. கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியும் செயல் என்ற வகையில் ஞானஸ்நானம், உண்மையான மனந்திரும்புதலுடன் தொடர்புடையதாகவும், விசுவாசி மனந்திரும்பியுள்ள பாவங்களில் இருந்து அவரை மன்னிப்பதற்கானதாகவும் உள்ளது.

மனந்திரும்புதல் என்றால் என்ன? ரோமர் 2:4ம் வசனம், "அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை

*அசட்டைபண்ணுகிறாயோ?" என்று கேட்கிறது. நாம் இவ்வசனத்திலிருந்து, தேவனுடைய இரக்கத்தினால் நாம் மனந்திரும்புதலுக்கு வழிநடத்தப்படுகின்றோம் என்று அறிகின்றோம். தேவனுடைய நற்தன்மையும் தயவும் அவருடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்விலும் மரணத்திலும் வெளியாக்கப்பட்டுள்ளன. அந்தப் பூரணமானவருடைய வாழ்வைப் பற்றி நாம் படிக்கையில், அவரது பூமிக்குரிய திருப்பயணத்தின் மூலமாக பரிசுத்தத்தின் வனப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். நாம் அவரைக் கல்வாரிக்குப் பின்தொடர்ந்து அங்கு அவர் பாடுபடுவதை, நமது பாவங்களுக்காக மரிப்பதை, அற்பமான பாவிகள் இரட்சிக்கப்படுதலை சாத்தியமாக்கியதைக் கவனிக்கின்றோம், மற்றும் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். அவர் இப்படிப்பட்ட சுடர்விடும் அன்பைக்கொண்டிருப்பது எதற்காக? அவர் இப்படிப்பட்ட நற்தன்மையைக் காட்சிப்படுத்தியது ஏன்? இப்போது நாம் வாசித்திருக்கும் வசனப்பகுதியில் இவற்றிற்கான பதில் வருகிறது: "... தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது."*

*2 கொரிந்தியர் 7:9, 10ல் பவுலின் வார்த்தைகளை நாம் நினைவு படுத்திப் பார்ப்போமாக: ''இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ... மனந்திரும்புகிறதற்கேதுவாக துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; ...'' மீட்கும் அன்பினுடைய வரலாறு இயல்பாகவே மக்களின் இருதயங்களைத் தொடும். தேவனுடைய வசனம் மக்களைத் தேவனுக்கேற்ற துக்கத்திற்கு வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மற்றும் தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலைச் செயல்படுத்தும். மக்கள் மனந்திரும்புதல் இல்லாவிட்டால் கெட்டுப்போவார்கள். நித்திய மரணம் என்ற அந்த அழிவில் இருந்து பாவம் நிறைந்த மனிதர் தப்பிக்க ஒரு வழியைச் சாத்தியமாக்குவதற்காகவே, இயேசு மரித்தார். இவ்விதமாக "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவான் 4:19).*

*நமது படிப்பில் இருந்து, நாம் தேவனுக்கேற்ற துக்கம் என்பது மனந்திரும்புதல் அல்ல, ஆனால் அது மனந்திரும்புதலுக்கு வழிநடத்துகிறது என்று முடிவுசெய்ய வேண்டும், மேலும், நாம் மறுசீரமைப்பு என்பது மனந்திரும்புதல் அல்ல, ஆனால் அது மனந்திரும்புதலின் விளைவாக உள்ளது என்றும் முடிவு செய்கின்றோம். அப்படியானால், மனந்திரும்புதல் என்றால் என்ன? இதற்கு நாம் பதில் அளிப்பதற்கு முன், ஒரு சில வேதவசனங்களைக் கவனிப்போம்:*

> *''ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை" (மத்தேயு 21:28-30).*

இந்த மகன் தனது மனதை மாற்றிக்கொண்டு, தான் செய்யமாட்டேன் என்று கூறியிருந்ததைச் செய்தான் என்று நாம் புரிந்துகொள்கின்றோம். அதுவே மனந்திரும்புதல் என்று இயேசு கூறினார். மேலும் இயேசு பின்வருமாறும் கூறினார்,

> யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள் (மத்தேயு 12:41).

நினிவேயின் மனிதர்களைப் பற்றி இயேசு என்ன கூறினார்? “அவர்கள் யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு … மனந்திரும்பினார்கள்.” இப்போது நாம் இதைப் பற்றி யோனாவால் கொடுக்கப்பட்ட விவரத்திற்குத் திரும்பி, அவர்கள் என்ன செய்தனர் என்று காண்போம்: “… அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்கள், …” (யோனா 3:10).

மனந்திரும்புதல் பற்றி இயேசு என்ன கருதுகின்றார் என்று இப்போது நாம் அறிகின்றோம்: அது மக்கள் தங்களின் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புவதாக உள்ளது. மறுசீரமைப்பு என்பது பொல்லாங்கில் இருந்து திரும்புதலின் விளைவாக உள்ளது; அது மனந்திரும்புதலின் விளைவாக உள்ளது. எனவே மனந்திரும்புதல் என்பது, இருதயத்தில் ஏற்படும் மாற்றமாக, மேன்மையானவற்றைச் செய்வதாகவும் பொல்லாங்கை விட்டுவிடுவதாகவும் தீர்மானித்தலாக உள்ளது.

பாவிகள் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது. அவர்கள் மேன்மையானவற்றைச் செய்யதீர்மானிக்கவும், பொல்லாத வழிகளைவிட்டு விலகவும், தங்கள் பாவங்களில் இருந்து மன்னிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவும் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளனர் (நடபடிகள் 2:38). ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட விசுவாசி பாவம் செய்தல் என்பது சாத்தியமானதாகவே உள்ளது. அவர்கள் அவ்வாறு பாவம் செய்யும்போது, அதற்கான பரிகாரத்தில் மனந்திரும்புதலும் உள்ளடங்குகிறது. விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்ற சீமோன் பாவம் செய்தபோது, பேதுரு, “ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்” என்று கூறினார் (நடபடிகள் 8:22).

தேவனுடைய பிள்ளையாயிருந்து தவறு செய்கின்றவர், இரக்கம் மற்றும் மன்னிப்பிற்காக வேண்டிக் கொள்ளக்கூடுவதற்கு முன்பு, அவர் மனந்திரும்ப வேண்டும். தவறு செய்கின்ற பரிசுத்தவான் மேன்மை யானவற்றைச் செய்வதென்றும், பொல்லாங்கை விட்டுவிடுவதென்றும், மன்னிப்பிற்காகத் தேவனுடைய அரியணையைத் தாம் அணுகுவதற்கு முன்பு தமது நோக்கத்தை மாற்றுவதென்றும் தீர்மானிக்க வேண்டும். அவர் மன்னிப்பின் இந்தச் சட்டத்திற்கு மனவிருப்பத்துடன் பணிந்தால், அவரை

*மன்னிப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார்.*

*பாவங்களில் இருந்து மனந்திரும்புதல் என்பது நம்மை இரட்சிப்பதற்குத் தேவனுடைய திட்டத்தின் பகுதியாக உள்ளது என்று கண்டுள்ள நிலையில், நாம் ஒவ்வொரு பாவத்தில் இருந்தும் மனந்திரும்பி அவரது அன்பின் கட்டளைகளைப் பின்பற்றும்படி திரும்பலாம். தேவனுடைய வசனத்தைப் படித்தல் என்பது உங்கள் இருதயத்தின் கதவருகில் தேவனுக்கேற்ற துக்கத்தைக் கொண்டு வரும்படியாக நான் ஜெபிக்கின்றேன். பின்பு, துக்கத்தின் ஆழங்களில், நீங்கள் உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவினிடமாய்த் திருப்பலாம். மனந்திரும்ப இயலாத ஆத்துமா பரிதபிக்கப்படத் தக்கதாக உள்ளது. சில உதடுகள், "தேவனே, நான் தவறு செய்திருக்கிறேன். நான் துக்கப்படுகின்றேன், நான் மாற்றிக்கொள்வேன்" என்ற வார்த்தைகளை வடிவமைக்கக் கூடாதிருத்தல் என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது. தாவீதின் பின்வரும் வார்த்தைகளை இன்றைக்கே நீங்கள் கூறவேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்,*

> *தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன் (சங்கீதம் 51:1-4).*

*கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, அவர்மீது நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதனால் கிறிஸ்துவினிடத்தில் வந்து சேர்வதற்கு இன்றைக்கே தீர்மானம் செய்யுங்கள்.*

---

This lesson was adapted from "Godly Sorrow," part of a printed series of *Herald of Truth* radio broadcasts. Reprinted by permission. James W. Nichols, G. K. Wallace, and C. E. McGaughey, *The Churches of Christ Salute You* (Abilene, Tex.: Beacon Publications, 1953), 99-103.